பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 05 செவ்வாய்க்கிழமை (17-02-2004) தொலைபேசி - 2223378 ஒலி 60

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# ஜனாதிபதி ஆட்சி முறையை

# கலைத்தே தீர வேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா சூளுரை

(நமது நிருபர்)



**தற்போதைய அரசியலில் நெருக்கடி மிகுந்த சூழ்நிலை காணப்படுவதினால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனோ, பெரும்பான்மை இன்றியோ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ரத்துச் செய்ய வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது.**

**இதனால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறையைக கைவிட நான் ஒரு போதும் பின் நிற்கமாட்டேன். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சூளுரைத்துள்ளார்.**

மஹரகமவில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றும் போதே கட்சியின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்;

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையானது பொருத்தமில்லாதவரது கையில் கிடைத்து விட்டால் அதன் மூலம் பயங்கரமான விளைவுகளை மக்கள் சந்திக்க வேண்டி ஏற்படும்.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இத்தகைய அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட சகல தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு நான் தயாராக வுள்ளேன்.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்களின் ஆணை அவசியம் தேவைப்படுகிறது. மக்களின் ஆணையின்றி சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லமுடியாது. இதனால் அதற்குரிய மக்கள் ஆணையை இத் தேர்தலில் எதிர் பார்க்கிறேன்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எவருக்கும் கணிசமான பலத்தைக் கொடுக்கூடாது. ஓரிரு ஆசனங்களைக் கூட மேலதிகமாகக் கொடுப்பது தவறு. இதனால் ஒருவராலும் திருப்தி

(12ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனுடன் கூட்டமைப்பு சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் இன்று சந்தித்துப் பேசவுள்ளனர்.

இச் சந்திப்பு கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

பொதுத் தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் குறித்து இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் இளம்பரிதியுடன் நேற்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டேயிற்கும், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றது.

நேற்றைய தினம் பிற்பகல் 3.00 மணிமுதல் 4.00 மணிவரை இடம் பெற்ற மேற்படி சந்திப்பின் போது குடாநாட்டின் நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது யாழ்.குடாநாட்டில் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை இன்னமும் ஏற்படவில்லை. யாழ். குடாநாட்டில் அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிப் போராளிகளுககுரிய சுதந்திரம் இல்லை. மக்கள் இங்கு பூரண சுதந்திரத்துடன் நடமாட முடியாத நிலை உள்ளது. கடற்தொழிலாளர்கள்

(12ம் பக்கம் பார்க்க)



## அமைச்சர் மிலிந்த இராஜினாமா

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவின் இராஜினாமாவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஏற்றுக் கொண்டுள்ளார்.

மிலிந்த மொறகொட வகித்து வந்த அமைச்சுப் பொறுப்புக்கள் அனைத்தும் நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸியிடம் உடனடியாக அமுலுக்கு வருமாறு ஜனாதிபதி ஒப்படைத்துள்ளார். (ம)

## ஊடகத்துறை அமைச்சுக்கு எதிராக மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தொலைக்காட்சிச் சேவை ஒன்றை இயக்குவதற்கு 1995 ம் ஆண்டு வழங்கப்பட்ட அனுமதியை ஊடகத்துறை அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் ரத்துச் செய்துள்ளார்.

இதற்கு எதிராக ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நேற்று

(12ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் நியமனக்குழு நாளை கூடுகிறது

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக் குழு நாளை புதன்கிழமை கொழும்பில் உள்ள கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் காலை 10.00 மணிக்குக் கூடுகிறது.

இக் கூட்டத்தில் வீ.ஆனந்தசங்கரி கலந்து கொள்கிறார்.

(12ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தை கலைக்கமாட்டேன் என ஜனாதிபதி எழுதிய கடிதத்தை சபாநாயகர் வெளியிட்டார்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் முடிவடைய முன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன் என ஜனாதிபதி சந்திரிகா கடந்த ஓகஸ்ட் மாதம் 2ம் திகதி தமக்கு எழுதிய கடிதத்தை முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா வெளியிட்டுள்ளார். கடிதத்தின் விபரம் வருமாறு;

- கடமைகளை மேற்கொண்டு செல்வதற்கான பெரும்பான்மைப் பலத்தைப் பிரதமரும் அவரது அமைச்சரவையும் கொண்டிருந்தால் பாராளுமன்றத்தை கலைக்க மாட்டேன்.
- தேர்தலின் பின்னர் ஆறு ஆண்டு காலத்திற்கு பாராளுமன்றத்தை நடத்துவதற்கும் வாக்களித்த மக்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. இது அரசியல்வாதிகளுக்கும் நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் அனுமதிக்கப்பட்டதாகும்.

(12ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதவியில் இருந்து ஜோன் அமரதுங்க நீக்கம்

### ஜனாதிபதியின் அதிரடி தொடர்கிறது

(கொழும்பு)

கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க அமைச்சர் பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை ஜனாதிபதி நேற்றுப் பிறப்பித்திருந்தார். ஜோன் அமரதுங்கவுக்குரிய மேலதிக பாதுகாப்பு மற்றும் சலுகைகள் அனைத்தையும் மீளப் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு

(12ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவிவழங்கும் கூட்டம் இன்று வாஷிங்டனில்

(வாஷிங்டன்)

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் கூட்டம் வாஷிங்டனில் இன்று திட்டமிட்டபடி நடைபெறவுள்ளது.

அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் ஆமிடேஜ் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில், ஜப்பானின் விசேட

(12ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத் தீர்ப்பை ரத்து செய்யக் கோரிக்கை

### சம்பந்தன் மனுத் தாக்கல்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி கூட்டணி எந்த விதமான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாதென கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத்தடை உத்தரவைரத்துச் செய்யக் கோரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செலாளர் நாயகம் நேற்று வழக்கு ஒன்றைத்தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் சிரேஷ்ட உபதலைவர் யோசப் பரராசசிங்கம் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

இம் மனுவில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வ.ஆனந்தசங்கரி பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

(12ம் பக்கம் பார்க்க)

# கட்சிகளை ஒன்றிணையுமாறு அமைச்சர் ஹக்கீம் அழைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் முஸ்லிம் களின் நிலையான பிரதிநிதித்து வத்தை ஏற்படுத்துவதற்கான சகல முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைத்து போட்டியிட முன்வருமாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவரும் கப்பல்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சகல முஸ்லிம் கட்சி களுக்கும் அழைப்பு விடுத்துள் ளார்.

மடவலை மதீனா வித்தியால யத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ் அழைப்பினை விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்.

முஸ்லிம் கட்சிகள் பிரிந்திருப் பதால் முஸ்லிம் மக்களின் பலம் வெறும் கனவாகிவிடும்.

எனவே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிட முன் வரவேண்டும்.

அவ்வாறு சகல முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைந்து முஸ் லிம்களின் பிரச்சினைகளை ஒரு மித்த குரலில் அரசுக்கும், சர்வ தேச சமூகத்திற்கும் எடுத்துக் கூற வேண்டும் என்றார். (தி-60.10)

## எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த 50 திட்டங்கள் முன்னெடுப்பு

(கொழும்பு)

எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத் தும் வகையிலான 50 செயற்திட் டங்கள் உலக வங்கியின் அனுசர ணையுடன் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளன.

சமூக மேம்பாட்டை அடிப்படை யாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட வுள்ள மேற்படி திட்டங்களுக்கு, இந்நோயைக் கட்டுப்படுத்துவதற் காக உலக வங்கி வழங்கிய 125 இலட்சம் அமெரிக்க டொலர் பயன்படுத்தப்படவுள்ளது.

அந்த வகையில் இந்நிதியைப் பயன்படுத்தி சமூக அடிப்படையி லான 50 திட்டங்களுடன், 42 எயிட்ஸ் தடுப்பு உபதிட்டங்களுட னும் முன்னெடுக்கப்படவுள்ளன. இச் செயற்திட்டங்கள் அனைத்தும் அரச சார்பற்ற நிறுவனங்களூடாக அமுல்படுத்தப்படவுள்ளன.

சுகாதார அமைச்சினால் முன் னெடுக்கப்படவுள்ள மேற்படி செயற திட்டங்கள் தொடர்பான உடன் படிக்கை ஒன்று, அண்மையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அதுவ கஹன்டலியன கேயின் வழிகாட்டலில், சுகாதார அதிகாரிகள் மற்றும் அரசசார் பற்ற நிறுவனப் பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் சுகாதாரத்துறை மற்றும் பொருளா தாரம் உட்பட அனைத்துத் துறை களிலும் உலக வங்கி தனது பங் களிப்பைத் தொடர்ந்து வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

### வட-கிழக்கு மாணவர்களுக்கு

## இரண்டாம் தவணை முதல் இலவச மதிய உணவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இரண்டாம் தவணை முதல் இலவச மதிய உணவு வழங்கப்படவுள்ளது.

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன், மாணவர்களுக் கான உணவூட்டல் திட்டத்தின் மூலம் இது நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இத்திட்டத்தினூடாக, வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள 1 இலட்சத்து 7ஆயிரத்து 363 மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள மாணவர்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்தும் வகையி லேயே இவ் இலவச மதியஉணவு வழங்கும் திட்டம் நடை முறைப் படுத்தப்படவுள்ளது.

பாடசாலைகளில் கல்வி பயி லும் தரம்-1 முதல் தரம்-9 வரை யான மாணவர்களில் வடக்கில் 59 ஆயிரத்து 134 மாணவர்களும், கிழக்கில் 48 ஆயிரத்து 229 மாண வர்களும் இவ் இலவச உணவுத் திட்டத்தின் மூலம் பயனடையவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

## தொழிற் திணைக்களத்தால் தொழிற்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசாங்க அதி பரின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத் திலுள்ள பிரதேச செயலர் பிரிவுக ளிலுள்ள மேசன் மற்றும் உதவி மேசன் ஆகியோருக்கு தொழிற் திணைக்களத்தால் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேசன் மற்றும் உதவி மேசன் ஆகியோரின் தொழில்திறமை, வினைத்திறன் மற்றும் அனுபவத் தின் அடிப்படையில், சிறந்த தொழில்நுட்பங்களை உள்ளடக்கி இப்பயிற்சி நெறி நடத்தப்படவுள் ளது.

இத் தொழில் பயிற்சியில் சிறந்து விளங்குவோருக்கு பெறு மதியான சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-16)

## சிவராத்திரிவிழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மஹா.சிவராத்திரி விழா ஆவரங்கால் சிவன்கோயில் சிவசக்தி மணிமண்டபத்தில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ள வுள்ளார். (ச)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

அகாயக்குளம் விநாயகர் ஆலய சிவராத்திரி நிகழ்வுகள் நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆலய முன்றலில் நடை பெறவுள்ளது. ஆலய அறங்காவ லர் சு.செந்தில்நாதன் தலைமை யில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் சொற்பொழிவுகள், கோபூசை, கோபவனி, மாணவர்களின் நிகழ்ச்சி கள் என்பன இடம்பெறவுள்ளன. (ச)

## மெய் வல்லுநர்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூ ரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆயர் தியோகுப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெறவுள் ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந் தினர்களாக யாழ். தேசியகல் வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன், திருமதி இராஜாம் பிகை கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கான மெய்வல் லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.இராச துரை தலைமையில் நடைபெற வுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி இ.பாலசுந்தரம் பிள்ளையும், கௌரவ விருந்தி னராக நாவாந்துறை றோ.க.வித்தி யாலய அதிபர் க.செபஸ்தியாம் பிள்ளையும் கலந்துகொள்ள வுள்ளனர். (ச)

✦ ✦ ✦

(ஏழாலை)

ஏழாலை முருகவேள் வித்தியா லயத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ்.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் தீவகவலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன், வண.பிதா, யோ.அ.ஜேசுதாஸ்,எழுவைதீவு றோ.க.த.க.பாடசாலை அதிபர் மு.சத்தியசீலன், அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை அதிபர் வீ.ஓங்காரலிங்கம் ஆகியோர் விருந் தினராக கலந்து கொள்ளவுள் ளனர். (தி-90)


சங்குநாதம்




★ ஐ.தே.முன்னணி வெற்றி பெற்றால் ஜனாதிபதி இராஜினாமா செய்வாரா? விதுரன்

★ ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டுக்குள் குழப்பம் கோவையூர் ஜெயன்

★ தேர்தல்களம் போகிறார் பாரீர் டொறிங்ரன்

வாழ்வை வளப்படுத்த துரைமுருகா எழுதும் என் சோதிடம்

கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள் (தொடர்கதை)

வியாசரின் பதில்கள்

சினிமாச் சிதறல்

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா. 16.00

# தனிமனித மாண்புகளை மதிப்பதே முழுமையான வளர்ச்சிக்கு வழிகோலும்

அருட்திரு S.J.இராஜநாயகம்


இன்றைய உலகில் ஒரு குடும்பத்தில் எல்லாத் திசைகளிலுமிருந்து பல சக்திகளினால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது அல்லது தாக்கப்படுகின்றது. சமூக பொருளாதார அமைப்புக்கள், சூழல் இவற்றில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒரு குடும்பம் எவ்வாறு வாழவேண்டும் என்பதும், அதனுடைய மாண்பும் தன்மையும் இவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றது.

உலக மயமாக்கல் புதிய நிலைகளையும் பாணிகளையும், புதிய பரிமாணங்களையும், எதிர்பார்ப்புக்களையும், ஆராய்ச்சிகளையும் ஊடகங்கள் மூலம் எமக்கு வழங்கி வருகின்றன. குடும்பங்கள் இவைகளை உள்வாங்கி இவைகளுக்கு ஒத்துப்போகும் தன்மையை இன்றைய குடும்பங்களில் நாம் காண்கின்றோம்.

### குடும்பங்களைப் பாதிக்கும் காரணிகள்

உலக வலைப்பின்னல்களின் ஊடாக பயங்கரவாதம், போதைவஸ்து, பாலியல், குடியகல்வு, மனித மதிப்பீட்டிற்கு பதிலாக பொருளாதாரத்தின் மேலான்மையின் அழுத்தம் என்பன எமது மரபு வழி மதிப்பீடுகளையும், கலாசாரத்தையும் அர்த்தமற்றவையாக்கி விட்டன. இதனால் அநீதியான போட்டிகள் உருவாகி ஏழ்மைக்கும் தனவந்தத்திற்குமிடையில் பாரிய இடைவெளி உருவாகியுள்ளது. இதனால் அதிகாரம் படைத்தோர் மனிதத்தை மதிக்காமல் தமது நலன்களையே கருத்தாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். இத்தகைய சூழலில் புதிய மதிப்பீடுகள், எதிர்பார்ப்புக்கள், நல்ல எதிர்பார்ப்புக்கள், மதிப்பீடுகளை சிதைக்கின்றன.

இதில் ஊடகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அது மாதிரிகைகளையும் மாய வாழ்க்கைப் பாணிகளையும் (Illusory life Styles) தருகின்றது. இதற்கமைய குடும்பங்கள் தங்களை உருவாக்க முற்படுகின்றன.



## மருத்துவ விளக்கம்

இதைவிட தற்போதைய தொழில் நுட்பங்கள், பொருளாதாரம், சூழல் என்பன குடும்பங்களைப் பாதிக்கின்றன. (உ-ம்) வேலைத்தளம், வேலை நேரம், வருவாய், பாதுகாப்பு, விடுப்பு, ஓய்வூதியம் என்பன குடும்பத்தின் பாணியைத் (Styles) தீர்மானிக்கின்றது. இந்தப் பாணி வீட்டுக்கு வெளியேயும் உள்ளேயும் செல்வாக்கு செலுத்துகின்றது. (உ-ம்) பிள்ளை வளர்ப்பு, சுதந்திரம், விளையாட்டு.

தற்போதைய கல்வியும் குடும்பத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது. தனிநபர் மற்றவர்களுடன் எப்படி வாழ்வது என்பதை தற்போதைய கல்வி எமக்கு எடுத்துரைக்கின்றது. இவைகள் ஒருவரை நல்ல அல்லது நெறி தவறிய வாழ்வுக்கு இட்டுச் செல்லும். கல்வியால் பெறப்பட்ட தகவல்கள் அல்லது உருவாக்கம் ஒரு குடும்பத்தை பாதுகாக்க, கூடாதவைகளை எதிர்க்கப் பயன்படுகின்றது. (உ-ம்) வன்முறை, போதைவஸ்து நாம் வாழும் சமூகத்தின் பாங்கு (Attitudes) முற்சார்பு எண்ணங்கள், குடும்பத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது. அதேநேரத்தில் அரச சட்டங்களும் குடும்பத்தைப் பாதிக்கின்றது. (உ-ம்) செயற்கை முறைக் குடும்பநலத் திட்டம், கருக்கலைப்பு என்பன, உள்நாட்டுப் போரும் குடும்பத்தைப் பாதிக்கின்றது. (உ-ம்) இடப்பெயர்வு சொத்து, உயிரிழப்பு என்பன குடும்பத்தின் நெருக்கீடுகளை உருவாக்குகின்றன.

### குடும்பங்கள் நெருக்கீடுகள் கையாளும் முறைகள்

முன் எப்பொழுதும் இல்லாதவாறு குடும்பங்கள் நாலாபக்கத்திலுமிருந்து பல தாக்கங்களுக்கு உள்ளாகின்றது. இதன் விளைவு

1. குடும்பவாழ்க்கை முறையில் நிரந்தரமற்ற தன்மை
2. ஒரு பெற்றார் குடும்பம்
3. விவாகரத்து/ பிரிதல்
4. தந்தை இல்லாத வீடு
5. குடும்ப உறவுகள் சிதைந்த நிலை

இதனால் பிள்ளைகளை வளர்க்கத் தெரியாத நிலை அல்லது பிள்ளை வளர்ப்பு கடினமாதல், குடும்பம் முழு வளர்ச்சியடையாமை, ஆளுமையைக் கட்டியெழுப்ப முடியாமையினால் மரபு வழி மதிப்பீடுகள் அற்றுப்போகின்றன. (உ-ம்) தனிமனித மதிப்பு, பொறுப்பு, அன்பு, பிரமாணிக்கம், சகிப்புத் தன்மை என்பன குடும்பத்தில் பிளவுகள் ஏற்படுவதினால் குழந்தைகள், வாலிபர்கள் சீரழிக்கின்றனர். குடி, போதைவஸ்துக்களில் இவர்கள் தஞ்சமடைகின்றார்கள். வன்முறை காலாசாரத்தினால் பெண்கள், முதியோர், குழந்தைகள், ஆண்கள் பாதிப்புறுகின்றனர். பாலியல் வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம், பொறுப்புக்களைப் புறக்கணித்தல், குழந்தை வேலை என்பனவும் இவற்றின் விளைவுகள் தற்போதைய மதிப்பீடுகள், சட்டங்களைப் பொறுத்துத்தான் குடும்பங்கள் இன்று செயற்படுகின்றன.

### இன்றைய நிலையில் குடும்பங்களுக்கு ஆற்றவேண்டிய பணிகள்

☛ இவைகளைத் தடுத்து குணப்படுத்தி, ஆதரவு கொடுத்து, கற்றுக் கொடுத்து வாழ்வை முழுமையாக வாழவைக்க சில அமைப்புக்களின் உதவி தேவை.

☛ பிரச்சினைகள் குடும்பத்தில் வரும் போது (உ-ம்) உறவுகள் பிளவுபடும் போது, வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றைச் சரிசெய்ய அமைப்புக்கள் தேவை.

☛ நடுநிலையில் இருந்து குடும்பங்களை சீராக்குதல், உறவுகளைப் புதுப்பித்தல், உதவி செய்தல் என்பவற்றைச் செயற்படுத்தல் சிறந்த மாதிரிகையான குடும்பங்கள் உதவலாம்.

☛ சில பிரச்சினைகளை ஆராய்ந்து உதவ உளவியல், சமூகவியல், பொருளாதாரம், கலாசாரம் அறிந்த நிபுணத்துவ குழுக்கள் தேவைப்படுகின்றன.

இங்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் மேற்கூறிய சிலவற்றைச் செய்கின்றன. முக்கியமாக இப் பணியில் குடும்பமும் மனிதமும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். குடும்பத்தினதும், தனி மனிதனினதும் மாண்புகள் உறுதி செய்து மதிக்கப்பட்டு முழு வளர்ச்சிக்கு அவர்களை இட்டுச் செல்ல வேண்டும். குடும்பத்தில் வாழும் மனிதர்கள் தம்மோடும் பிறரோடும் அமைதியைப் பேணுகின்றவர்களாகவும் முழு வளர்ச்சியைப் பெற தங்களின் ஆற்றல்கள் திறமைகளைக் கண்டுணர்ந்து அவற்றைத் தம் வாழ்வில் பிரயோகிக்கவும் அதை ஏனையோருக்கு வழங்குகின்றவர்களாகவும் இருந்தல் வேண்டும்.

இப்படியான ஒரு வாழ்விற்கு இட்டுச் செல்ல அவர்களுக்கு அன்பு, ஆதரவு, கரிசணை யார் கொடுக்க முடியும்? இதற்கு விடை, வாழ்வை மையப்படுத்திய ஒரு ஆன்மீகம் தேவை. மனிதம் வாழும் ஒவ்வொரு படிகளிலும் அவனை / அவளை உறுதிப்படுத்தி வளர்ச்சி பெறச்செய்து, அவர்களின் வாழ்வை பாதுகாத்து, அவர்களுடன் பயணம் செய்யும் ஆன்மீகமும் அமைப்பும் தேவை. □

# கூட்டணி ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு ஆனந்தசங்கரி இரா.சம்பந்தனுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்பான கடமைகளை உரியவர்கள் உரிய முறைப்படி செய்யாது, குறுக்கு வழிகளை நாடுவதால் தான் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய பொதுச்சபைக் கூட்டத்தை 14ஆம் திகதியும், தேர்தல் நியமனக் குழுக் கூட்டத்தை 15ஆம் திகதியும் கூட்ட நீங்கள் விரும்பியபோது முக்கியத்துவம் மிக்க இக் கூட்டங்களை கூட்டுவதற்கு ஒருவாரகால அவகாசம் கொடுக்கவேண்டுமென்பதால் இவ்விரு கூட்டங்களையும் நாளை புதன்கிழமை கூட்டுமாறு கருத்துச் சொன்னேன். ஆனால் எனது நோக்கம் ஈடேறாத வகையில், கால தாமதத்தை ஏற்படுத்திய பின்னர் இக்கூட்டம் பற்றியஅறிவித்தலை நேற்று எனக்குத் தந்திருக்கிறீர்கள் இக்காலதாமதத்திற்குரிய உள்நோக்கம் என்ன?

தேர்தல் நியமனக் குழு இது வரை ஒரு போதும் கூடவில்லை. முதன் முறையாக கூட இருக்கும் கூட்ட அறிவித்தலில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் என்ன? பேசப்பட வேண்டிய விடயங்கள் என்ன? என்பது போன்ற எந்த அறிவுறுத்தலும் தரப்படாதது பெரும் குறையாகப்படுகின்றது.

நடக்க இருக்கும் இக் கூட்டத்தில், கால அவகாசத்தைக் கருத்திற் கொண்டு சில துரித, ஆனால் முறையான முடிவுகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரச்சினைகள் இன்று நீதிமன்றம் வரை சென்றுவிட்ட நிலையில், நாம் எச்சரிக்கையோடு செயறபட வேண்டியுள்ளது. ஆகையால் தயவுசெய்து பின்வரும் ஆவணங்களை உடனடியாக எனது பார்வைக்குத் தருமாறு வேண்டுகிறேன்.

1. தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக பல்வேறு மாவட்டங்களிலும் போட்டியிட விரும்பி விண்ணப்பித்தவர்களின் விபரங்களை அவர்களின் விண்ணப்பப்படிவங்களுடன் தரவும்.

2. விண்ணப்பங்கள் கோரி விளம்பரங்கள் மூலமோ, நேரடியாகவோ, வேறு வகையிலோ வேண்டுகோள் விடுத்திருப்பீர்கள். (அவற்றின் பிரதிகள்)

3. விண்ணப்பதாரிகளுக்கு நிபந்தனைகள் ஏதும் விதித்திருந்தால், அவை பற்றிய விபரங்கள்.

இவைகளையும் இவற்றோடு தொடர்புடைய வேறு ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் எனக்கு தந்துதவும்படி வேண்டுகிறேன்.

இவ் விபரங்கள் தொடர்பாக முன்கூட்டியே என்னுடன் கலந்து பேசி முடிவெடுக்காத காரணத்தினால் மேற்கூறிய ஆவணங்களை தந்துதவுமாறு வேண்டுகிறேன். இந்த விடயங்கள் பற்றிய முன்னறிவு, கூட்ட நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள உதவும். மேலும் இவைபற்றி நான் அறிந்திருக்க வேண்டியதும் அவசிய மாகும்.

மேலும், நீங்களும் சிரேஷ்ட உப தலைவர் யோசப்பரராஜசிங்கமும், திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் பட்டியல்களைத் தயாரித்து விட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதனால், கட்சியின் மூத்த உறுப்பினர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இக்கருத்துக்களின் நம்பகத்தன்மை பற்றி நான் கருத்துக் கூற முடியாது எனினும், நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மீறி, கூட்டங்களை கூட்டி, இப்படியான தீர்மானங்களை மேற்கொள்ளும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவார்களேயானால், நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு ஆளாவார்கள் என அவர்களுக்கு கூறி ஆறுதல் படுத்தியுள்ளேன். ஆனால், உங்கள் இருவரினதும் விருப்பப்படி திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உங்கள் 'கைத்தடிகளை' வேட்பாளர்களாக நிறுத்துவதற்காகத்தான் தேர்தல் நியமனம் தொடர்பான ஏற்பாடுகளை தாமதப்படுத்துகிறீர்கள் என்று உங்கள் மீது குற்றம் சாட்ட அவர்கள் தவறவில்லை

எது எப்படியிருப்பினும், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசாவையும் காலம் சென்ற தங்கத்துரையையும் எங்கள் கட்சிக்குத் தந்து உதவி பெருமை கொண்ட மட்டக்களப்பு, மூதூர் கட்சிப் பெரியவர்களின் இதயங்களையும் நாம் புண்படுத்தி புறந்தள்ளிவிடக் கூடாது.

நான் மேற்கூறியுள்ள விடயங்கள் தொடர்பான சகல குறைபாடுகளையும் நேர்ப்படுத்த உதவீயாக நான் மேலே கேட்டுள்ள ஆவணங்களைத் தந்துதவவும். இவற்றைத் தருவதில் தாமதம் ஏற்படுமானால், நீங்கள் ஏதோ உள்நோக்கத்துடன் தேர்தல் நியமனக் குழுக் கூட்டத்தைத் தாமதப்படுத்துகிறீர்கள் என்ற கிழக்கு மாகாணத்தவர்களின் கருத்தை, நானும் ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவேன் இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(தி)

# அஞ்சல் மூல வாக்களிப்புக்கு 23 வரை விண்ணப்பிக்கலாம்

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதியுடையோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சி.நடராஜா அறிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக நேற்றைய தினம் யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற முக்கிய கூட்டத்திலேயே அவர் இதனை அறிவித்துள்ளார்.

உதவித்தேர்தல் ஆணையாளர் இவ்விடயங்கள் தொடர்பாக மேலும் குறிப்பிடுகையில்,

நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் ஆகியன தமது வேட்புமனுக்களை இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 24ஆம் திகதிவரை தாக்கல்செய்யலாம்.

ஆயினும், இக்காலப்பகுதியில் சிவராத்திரி தினமான நாளை புதன்கிழமை, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப.4.45 மணிவரை இதற்கான வேட்புமனுக்களை யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கும் தேர்தல் திணைக்கள அலுவலகத்தில் தாக்கல் செய்யலாம்.

இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை யாழ். மாவட்ட தேர்தல் அலுவலகம் மற்றும் அந்தப்பகுதி பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் சென்று பெற்றுக்கொள்ளலாம் எனவும் யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் மேலும் அறிவித்துள்ளார். (தி-19,16,43)

# இந்திய - பாக். நேரடிப் பேச்சுவார்த்தை

# இஸ்லாமபாத்தில் நேற்று ஆரம்பமானது

(புதுடில்லி)

இந்திய - பாகிஸ்தானிடையே அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்கள் இஸ்லாம பாத்தில் நேற்றுத் தொடங்கின.

இந்திய வெளியுறவுத்துறை இணைச் செயலர் அருண்குமார் சிங், பாகிஸ்தான் வெளியுறவுத் துறையின் தெற்காசிய இயக்குநர் ஹலி அப்பாஸ் டிலானி இடையிலான இந்தப் பேச்சுவார்த்தை இரண்டு நாட்கள் நடைபெறும்.

பிரதமர் வாஜ்பாயும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் கடந்த மாதம் 5 ஆம் திகதி சார்க் மாநாட்டின் போது இஸ்லாம பாத்தில் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகின்றது.

இருநாடுகளுக்கும் இடையே விரிவான பேச்சுவார்த்தை தொடங்குவதற்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் வழிமுறைகள் பற்றி இரண்டு அதிகாரிகளும் ஆலோசிப்பார்கள்.

இதைத் தொடர்ந்து நாளை இந்திய வெளியுறவுச் செயலரும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலரும் சந்தித்து இதற்கு இறுதி வடிவம் கொடுப்பார்கள். அதன் அடிப்படையில் விரிவான பேச்சு வார்த்தைக்கான விபரங்கள் வெளியிடப்படும் எனக் கூறப்படுகிறது. (துஃ9)



புதுடில்லியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மலர்க்கண்காட்சியில், பூவின் அழகில் மயங்கிய இளம்பெண்.

## ஒருவார காலத்தில் 3 வேலைநிறுத்தங்கள்

## பங்களாதேஷ் எதிர்க்கட்சியின் ஏற்பாடு

(டாக்கா)

பங்களாதேஷில் பிரதான எதிர்க கட்சியின் ஏற்பாட்டில் நேற்று பொது வேலை நிறுத்தம் ஒன்று நடத்தப்பட்டது.

பிரதமர் பெ.்.ஹீம் காலி தாஷியா தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியே இந்த வேலை நிறுத்தம்நடத்தப்பட்டது.

கடந்த ஒருவாரத்தில் எதிர்க் கட்சியினால் நடத்தப்படும் மூன்றாவது வேலை நிறுத்தம் இது வாகும். இந்த வேலை நிறுத்தம் காரணமாக வீதிகள் வெறிச்சோடிக் கிடப்பதாகவும் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் என்பன மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக வன்முறைகள் எதுவும் இடம்பெற்றுவிடாமல் தடுப்பதற்கு பங்களாதேஷின் தலைநகர் டாக்கா, துறைமுக நகரமான சிறரக் ஹோன் ஆகியவற்றில் இருந்து நூற்றுக்கணக்கான பொலிஸாரும் பரா இராணுவத் துருப்பினரும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (து-9)

## ருவாண்டாவில்விபத்து 40 பேர் உயிரிழப்பு

(கிகலி)

ருவாண்டாவில் மோசமான சாலை ஒன்றில் சென்று கொண்டிருந்த பயணிகள் நிறைந்த மினி பஸ ஒன்றின் மீது பெற்றோல் ராங்கர் ஒன்று மோதியதில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 40 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

வாண்ரீமா என்ற இடத்திலிருந்து தலைநகர் கம்பாலாவுக்கு சென்று கொண்டிருந்த இந்த ராங்கரும் மினி பஸ்ஸூம் நேருக்கு நேர் மோதிக்கொண்டு கவிழ்ந்ததால் தீ பற்றி எரிந்தது.

இந்த விபத்தில் 4 பேர் உயிர் தப்பினார்கள். விபத்து நிகழ்ந்த போது எத்தனை பயணிகள் மினி பஸ்ஸில் இருந்தனர் என்பது பற்றி தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (து-9)

## சீனாவில் தீ விபத்து

## 90 பேர் உயிரிழப்பு

(பெய்ஜிங்)

சீனாவில் நேற்று முன்தினம் நடந்த இரண்டு பெரும் த விபத்துச் சம்பவங்களில் குறைந்த பட்சம் 90 பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

வடகிழக்குச் சீன நகரான ஜிலினில் கடை வளாகக் கட்டடம் ஒன்று தீப்பிடித்ததில் 51 பேர் பலியானார்கள்.

5 மாடிக்கட்டடமான கடை வளாகத்துக்குள் பெரும் தீச் சுவாலைகளும் அடர்த்தியான புகையும் பரவியதில் 70 க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

அதில் சிலர் தீயணைப்படையினராவர். இந்தச் சம்பவம் நடந்து ஒருசில மணிநேரத்தில் கிழக்குச் சீனாவில் கிராமக் கோயில் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும்,

அந்தச் சம்பவத்தில் 39 பேர் பலியானதாகவும் ஜிங்குவா செய்தி நிறுவனம் கூறுகின்றது. (து-9)

## வாஜ்பாய்- மேனகா காந்தி சந்திப்பு

## பா. ஜ. க வில் சேர அறிகுறி

(புதுடில்லி)

இந்தியப் பிரமதமர் வாஜ்பாயை முன்னாள் மத்திய அமைச்சர் மேனகா காந்தியும் அவரது மகன் வருண்காந்தியும் நேற்றுக்காலை புது டில்லியில் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்கள்.

அப்போது பாரதிய ஜனதாக் கட்சியில் சேருவது பற்றிய தங்களது விருப்பத்தை அவர்கள் இருவரும் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

நேற்று மாலை இதற்கான முறைப்படியான அறிவிப்பு வெளியிடப்படும் என பாரதிய ஜனதா வட்டாரங்கள் தெரிவித்த போதிலும் இதுவரை அப்படியான அறிவித்தல் எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

மேனகா காந்தி, காலஞ் சென்ற பிரதமர் இந்திரா காந்தியின் மூத்த புதல்வரும், ராஜீவ் காந்தியின் மூத்த சகோதரருமான சஞ்சய் காந்தியின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. (து-9)

WORLD NEWS உலக தரிசனம்



ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் கடந்த சனிக் கிழமை நீச்சல் குளத்தின் கண்ணாடிக் கூரை இடிந்து விழுந்ததில் காயமடைந்த சிறுவனை மீட்கின்றனர் தீயணைப்பு வீரர்கள்.

# சதாம்ஹூசைன் மீதான விசாரணை

# 2 வருடம் தாமதமாகலாமென அறிவிப்பு

(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம்ஹூசைனை நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப் படுவது அடுத்த இரண்டு வருடங்களுக்கு சாத்தியப்படாது என அந்த நாட்டின் சட்டத்தரணி ஒருவர் கூறியுள்ளார்.

பதவி கவிழ்க்கப்பட்ட சதாம் ஹூசைனின் வழக்கு இணைப்பாளராகக் கடமையாற்றும் சலீம் இச் சலாபி என்பவரே இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மனிதப் படுகொலைகள் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச் செயல்கள், போர் மரபுகளை மீறியமை முதலியன தொடர்பாக சதாம் ஹூசைனுக்கு எதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதில் பல்வேறு குழப்பங்கள் நிலவுவதாக பிரிட்டனில் இருந்து வெளியாகும் ''கார்டியன்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலே அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணைகளைத் நடத்துவதற்கு நீதிபதிகளை தெரிவு செய்வதற்கும், நீதிமன்றமொன்றை தயார் செய்வதற்கும் கைதிகளை மிகவும் பாதுகாப்பாக சிறைகளில் வைப்பதற்கும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தாமதப்படுவதாலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (து-9)



பேர்லினில் கடந்த சனிக்கிழமை நடந்த 54 வது சர்வ தேசத் திரைப்பட விழாவில் சிறந்த நடிகைக்கான வெள்ளிக் கரடி விருதைப் பெற்ற கொலம்பிய நடிகையான காடலினா அவ்விருதை முத்தமிடுகிறார்.

## காதிர்கானுக்கு மாரடைப்பு

(இஸ்லாமபாத்)

இரகசியமான முறையில் பிற நாடுகளுக்கு அணுஆயுதத் தகவல்களை அளிப்பதில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பாகிஸ்தானிய விஞ்ஞானியான அப்துல் காதிர்கானுக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அவருக்கு மருத்துவசிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் உள்ளூர் நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. (து-9)

## அணுவாயுத தொழில் நுட்பம் தொடர்பாக

## பாக்.-சவூதி நாடுகளுக்கு சீனா ஒத்துழைப்பு

### அமெரிக்கா தெரிவிப்பு

(வாஷிங்டன்)

அணுவாயுதத் தொழில் நுட்பம், ஏவுகணைத்திட்டம் ஆகியன தொடர்பாக பாகிஸ்தான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு சீனா ஒத்துழைப்பு வழங்கி வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆயுத உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதறகு உறுதி வழங்கியுள்ள நிலையில் இத்தகைய ஒத்துழைப்புக்களை சீனா வழங்கியுள்ளதாக, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாரம் அமெரிக்க, சீன அதிகாரிகள் பெய்ஜிங்கில் கூடும் போது இவ்விடயம் தொடர்பாக ஆராயப்படுமென அமெரிக்க அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொளளும் அமெரிக்காவின ஆயுதக்கட்டுப்பாட்டு அதிகாரியான ஜோன் வோல்டன் ஆயுத உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதுமாறு சீன அதிகாரிகளை கோருவாரென அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அணுவாயுதத் தொழில் நுட்ப இரகசியங்களை லிபியா, ஈரான், வடகொரியா ஆகிய நாடுகளுக்கு பாகிஸ்தான் அணுத்திட்டத் தந்தை அப்துல் காதிர்கான் வழங்கியதாக ஒப்புக்கொண்டதை அடுத்தே, ஆயுத உற்பத்தியை கட்டுப்படுத்துவது தொடர்பாக உலகத்தின் கவனம் திரும்பியுள்ளது. (து-9)

# செய்தித் துளிகள்

## கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பாடத் தெரிவு வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று இன்று கோட்டரீதியாக நடைபெறவுள்ளது.

இதற்கமைய நல்லூர் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு யா/இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்.கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு யா/மத்திய கல்லூரியிலும், கோப்பாய் கோட்டப் பாடசாலை மாண வர்களுக்கான கருத்தரங்கு, யா/கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

(தி-8,96)

## பாற்குட வைபவம்

(இருபாலை)

சுப்பிரமுனிய சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட திருக்கோவிலில் சிவராத்திரி தினமான நாளை புதன்கிழமை பாற்குட வைபவமும் விஷேட பூஜை வழிபாடுகளும் நடைபெறவுள்ளது.

(தி-64)

## வீட்டுத் திட்டத்திற்கு நிதியுதவி

(பொன்னாலை)

புண்டத்தரிப்பு பிரான்பற்றில் 24 குடும்பங்களுக்கு முழுத்திட்ட வீட்டு நிவாரண உதவி வழங்குவதற்கு முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் முன்வந்துள்ளார்.

ஜே/147 கிராம அலுவலர் பிரிவில் 15பயனாளிகளும் ஜே/14 கிராம அலுவலர் பிரிவில் 9பயனாளிகளும அரைத்திட்ட வீட்டு நிவாரண உதவிகளுக்கு முதலில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

ஆயினும் கடந்தவாரம் மேற்படி பயனாளிகள் முழு வீட்டுத்திட்ட உதவி பெறுவதற்காக முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் 4லட்சத்து 50ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-49)

## கணனிப் பயிற்சி

(ஏழாலை)

வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் மனிதவள அபிவிருத்தி நிலையத்தினரின் அனுசரணையுடன் கணனிப்பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற் தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வகுப்பில் 20 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர். (தி-90)

## ஒன்றுகூடலும் விருந்துபசாரமும்

(பண்ணாகம்)

யாழ்ப்பாணம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடலும், விருந்துபசார நிகழ்வும் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.9.30மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (தி-76)

## மகப்பேற்றுமனை திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொசசி உருத்திரபுரம் மத்திய மருந்தக மகப்பேற்று மனை புனரமைக்கப்பட்டு கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது. அத்துடன், புதிய மகப்பேற்று விடுதிக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது.

உருத்திரபுர மருந்தக வைத்திய அதிகாரி மு.கோபாலபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில புனரமைக்கப்பட்ட மகப்பேற்று மனையே கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நாடாவினை வெட்டி வைபவ ரீதியாகத் திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து, புதிய மகப் பேற்று விடுதிக்கான அடிக்கல்லை கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகம் நாட்டிவைக்கார். (கி-35)

## சிறுவர்களுக்கான போட்டி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ.கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும தரம் 1முதல் தரம்-5வரையான மாணவர்களுக்கு 'சிறுவர் போட்டி நிகழ்வுகள்' நடாத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டத்தில் நடைபெறவுள்ள மேற்படி சிறுவர் போட்டி நிகழ்வுக்காக அனைத்துப் பாடசாலைகளும் தயார்ப்படுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகள் பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் வைகாசி மாதமும், வலய மட்டத்தில் எதிர்வரும் ஆனி மாதமும் நடைபெறுமென யாழ்.வலயக்கல்விப் பணிமனையின் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(தி-3)

## தீவிபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உதவி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் சிறுப்பிட்டி மேற்குப் பகுதியில் எதிர்பாராத தீவிபத்து ஏற்பட்டு வீடு முற்றாகச் சேதமடைந்து-மிகவும் பாதிப்புக்குள்ளான பொ.லோகநாதனின் குடும்பத்தாருக்கு ஜனசக்தி சிறுவர் கழகமும், கோப்பாய் பிரதேச சிறுவர்கள் ஊக்குவிப்பாளரும் இணைந்து, கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில், சீருடைகள், ஆடைகள் மற்றும் பாடசாலை உபகரணப் பொருட்கள் ஆகியவற்றை கடந்த புதன்கிழமை வழங்கியுள்ளது.(தி-18)

## ஞானச்சுடர் வாசகர் போட்டி முடிவுகள்

(மருதங்கேணி)

சந்நிதியான் ஆசசிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் ஞானச்சுடர் வாசகர்களுக்கு நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் முதலிடத்தை தர்ஷினி தவயோகராஜாவும் இரண்டாமிடத்தை வேலரசியும் மூன்றாமிடத்தை அபிராமியும் பெற்றுக்கொண்டனர்.

இப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

அவர்கள் அனைவருக்குமான பரிசில்கள் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பாண்பாட்டுப் பேரவையில் வைத்து வழங்கப்படவுள்ளது. (தி-35)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுளளதாக பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00மணிக்கு சுதுமலை தெற்கு மத்திய சனசமூக நிலையத்திலும், 10.00மணிக்கு சுதுமலை வடக்கு நாவலர் சனசமூக நிலையத்திலும், முப.11.30க்கு சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்திலும்.

எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு மானிப்பாய் கிழக்கு உச்சியோட பாரதி சனசமூக நிலையத்திலும் 10.00மணிக்கு மானிப்பாய் மேறகு சனசமூக நிலையத்திலும், 11.30க்கு கட்டுடை திருவள்ளுவர் சனசமூக நிலையத்திலும்,

மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.00மணிக்கு கூழாவடியில் உள்ள ஆனைக்கோட்டை சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்திலும், 10.30மணிக்கு உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலையத்திலும் நண்பகல் 12.00மணிக்கு நவாலி கிழக்கு முருகானந்தா சனசமூக நிலையத்திலும் வைத்து நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளகு. (கி-252)

## வியாழக்கிழமை கடைகள் பூட்டு

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வர்த்தக ஊழியரின் நலன் கருதி எதிர்வரும் 19ஆம திகதி வியாழக்கிழமை சகல கடைகளையும் பூட்டி சகல வர்த்தக ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்கும் வண்ணம் யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது.

(தி)

## சிவராத்திரி தின விஷேட பூசை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினமான நாளை புதன்கிழமை சரசாலை சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நான்கு சாமப்பூசைகளும் அபிஷேகங்களும் நடைபெறுவதோடு, இந்து மன்றத்தினரின் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

(தி-18)

## மரக்கன்றுகள் விநியோகம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள 10 கிராம சேவையாளர் பிரிவில் மீளக் குடியேறியுள்ள மக்களுக்கு தென்னம்பிள்ளை மற்றும் மரமுந்திரிகை மரக்கன்றுகளை அணமையில் மூவிமெண்டோ நிறுவனம் வழங்கியுள்ளது.

மேற்படி நிறுவனம், 10கிராம சேவையாளர் பிரிவிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் இக்கன்றுகள் வழங்கியுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு 7தென்னம் பிள்ளைகளும் 7 மரமுந்திரிகை கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-35)

## திருடர் தொல்லை அதிகரிப்பு

(கோப்பாய்)

கோப்பாய பருத்தித்துறை வீதியில் பிரதேசசபை அலுவலகத்தை அண்மித்த பகுதியில் நண்பகல் வேளைகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

திருமண விழாக்கள் நடைபெறும வீடுகளிலேயே இவர்கள் தமது கைவரிசையைக் காட்ட முற்படுவதாகத் தெரியவந்துள்ளது. இவ் வாரத்தில் பெண்களின் துணிச்சலினால் இரண்டு திருட்டுச் சம்பவங்கள் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(தி-79)

## மெய்வன்மை போட்டி

(வடலியடைப்பு)

யா/பண்டததரிப்பு மகளிர உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.1.30மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி கி.சிவராசா தலைமையில் பாடசாலை மைதானததில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச செயலர் அ.சுப்பிரமணிய சர்மாவும், சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் சு.வைரவநாதனும், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பா.பவநீதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(தி-21)

## மலசல கூடங்கள் கையளிப்பு

(பொன்னாலை)

இந்துசயம விவகார அலுவலகள் அமைச்சினால் சங்கானைப் பகுதியில் 25 மலசலகூடங்கள் கடந்தவாரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

சங்கானை-நிற்சாமம் கிராமத்திலுள்ள வறுமைக் கோட்டிற்குட்பட்ட 25குடும்பங்களுக்கே 25 மலசலகூடங்கள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தி-49)

# இம்மாதம் முதல் மின் கட்டணம் ஒரு ரூபாவால் அதிகரிக்கும்

(கொழும்பு)

இம்மாத பிற்பகுதியில், ஒரு அலகுக்கான மின் கட்டணம் ஒரு ரூபாவால் அதிகரிக்கவுள்ளதாக மின்சாரசபைத் தலைவர் எம்.சுபைர் தெரிவித்துள்ளார். ஆனால் இக கட்டண அதிகரிப்பை அமுல்படுத்துவதற்கு தேவையான அனுமதி இன்னமும் அரசாங்கத்திடமிருந்து பெறப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இதன்படி முதல் 400 அலகுகளுககும் கட்டண அதிகரிப்பு எதுவும் கிடையாது. 400ற்கு மேறபட்ட (400வது அலகு உட்பட) ஒவ்வொரு அலகிற்கும் ஒவ்வொரு ரூபா அதிகரிக்கப்படும்.

மின் உற்பத்தியில் ஏற்படும் அதிகரித்த செலவு காரணமாக மின்சார சபை பெரும் கஷ்டங்களின் மத்தியில் இயங்கி வருகிறது.

இதன் காரணமாகவே கட்டண அதிகரிப்பை அமுல்படுத்த அரசைக் கோரியிருந்தோம். தற்போது மின்சார சபை நீர் மின்னையும், அனல் மின்னையும் பயன்படுத்தி வருகின்றது. அனல் மின்னை தனியாரிடம் இருந்தே கொள்வனவு செய்கிறது. இதனால் அவர்களின் கட்டணங்களுககமையவே செயற்பட வேண்டியுள்ளது.

ஆனால் தற்போதைய வரட்சி நிலை காரணமாக எதிர்காலத்தில் மின் துண்டிப்பை மின்சார சபை அமுல்படுத்தாது. தற்போது மின்சார சபை 60மெகாவற் மின்சாரத்தைப் பாவித்துவருகிறது. இதற்கென பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம இருந்து கொள்வனவு செய்வதற்கு ஒவ்வொரு தடவையும் 3பில்லியன் ரூபாக்களை செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு சுபைர் கூறினார்.

(த-6)

# சிறுவர் நலன் காக்கும் திட்டம் அறிமுகம்

(மருதங்கேணி)

வடக்கு-கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நலன் காக்கும் திட்டம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், யுனிசெவ் நிறுவனமும் இணைந்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

கிளிநொச்சி வலயக்கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இச் செயல்திட்டம் சம்பந்தமாக பயிற்சிப்பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது.

கடந்த 6ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக உள்ள பாடசாலைகளில் இந்த விழிப்புணாவுப் பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டுவருகிறது.

இதில் வடக்கு-கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சிறந்த வாழ்க்கை நிலையை உருவாக்குவது தொடர்பாக சிறந்த விளக்கமளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(தி-35)

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பொலித்தீன் பாவனைக்கு தடை

(மருதங்கேணி)

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் பாவனைக்கு முற்றாக தடை விதிக்கப்படுள்ளது.

இது சம்பந்தமாக பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் உள்ள சகல உணவகங்களுக்கும் பிரதேச சபையால் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உணவகங்களில் லஞ்சீற்றிறகுப் பதிலாக வாழையிலை, தாமரை இலை மற்றும் வாழைத்தடல் போன்றவற்றைப் பாவிக்குமாறும், கொதித்தாறிய நீரினால் பாத்திரங்களைத் துப்பரவு செய்து பாவிக்கும்படியும், கொதித்த நீரை ஆற வைத்துக் குடிப்பதற்குக் கொடுக்கும்படியும் பிரதேச சபையால் உணவக உரிமையாளாகளுக்கு பிரதேசத்தின் நனமைகருதி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ் வேண்டுகோளைச் சகல உணவக உரிமையாளர்களும் கையாண்டு எதிர்வரும் மார்ச் மாததத்திற்குள் லஞ்சீற் பாவனையை முற்றாகத்தடை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபைச் செயலாளர் இ.து.சிவராசா கேட்டுள்ளார்.(தி-35)

# தேர்தல் ஆணைக்குழு அதிகாரம் ஆணையாளர் வசம்

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படாது விட்டாலும், அந்த ஆணைக்குழுவின் அதிகாரங்களை தேர்தல்கள் ஆணையாளரினால் நடைமுறைப்படுத்த முடியும் என சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ இதுபற்றித் தெரிவிக்கையில்,

தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படாத பட்சத்தில், அந்த ஆணைக்குழுவின் அதிகாரங்களை தேர்தல்கள் ஆணையாளரால் நடைமுறைப்படுத்த முடியும். இதனை அரசியல் யாப்பின் 17 வது திருத்தத்தில் காணலாம்.

அத்துடன், தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படாவிட்டால் தேர்தல்களை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்த முடியாமலிருக்கும என சில அரசியல் கட்சிகள் வெளியிட்டு வரும் கருத்தையும் சட்டத்தரணி விஜயதாச ராஜ பக்ஷ நிராகரித் துள்ளார். (தி-60,10)

# புதிய முன்னணியின் பிரசாரம் அநுராதபுரத்தில் ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முனணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அடுத்தவாரம் அநுராதபுரத்தில் வைபவரீதியாக ஆரமபிக்கப்படும் என முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் 4 திசைகளில் இருந்தும் மோட்டார் ஊர்வலத்தில் அநுராதபுரம் செல்லவிருக்கும் முன்னணி அங்கத்தவர்கள், அங்கு சத்தியப் பிரமாணம் ஒன்றைச் செய்து கொள்வார்கள்.

'பொதுத்தேர்தல் நீதியான அடிபபடையிலும் நியாயமாகவும் நடத்தப்படவேண்டும்' 'மக்களின் சிவில் உரிமைகள் பாதுகாக்கப் படவேண்டும்' என்ற விடயங்கள் குறித்து இவர்கள் அங்கு சத்தியப் பிரமாணம் செய்வார்கள்.

இதனையடுத்து, நாடளாவிய ரீதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரங்கள் வைபவரீதியாக ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக துண்டுப்பிர சுரங்கள் ஆயிரக் கணக்கில் அச்சிடப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. (தி-60,10)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

48

## தேச்வழமை அதிகாரம்-7

## கொள்வனவு விற்பனை

### ஆடு மாடுகளை விற்றல்

2. யாதொருவர் யாதொரு எருத்துமாடு,கடாமாடு, பசு, எருமை,ஆடு முதலானவைகளை விற்க வேண்டுமென்றால் இவைகளுக்கெல்லாம் பிரசித்தம் பண்ணி நறுக்குச் சீட்டு எழுதிக்கொள்ளுகிறதில்லை. இந்த விலை பிரமாணப்படுத்துகிறது. எப்படி எனில் அந்த மிருகங்களை விற்கிறவன் அந்த மிருகங்களின் எருவை எடுத்து, கொள்ளுகிறவன் கையிலே கொடுத்து எரு மாறிக்கொண்டால் அப்போது அந்த மிருகங்கள் விற்கப்பட்டவைகளாய்க் காணப்படும். இந்த மிருகங்களை ஒப்புக்கொடுக்கு முன் அவைகள் செத்துவிட்டாலும், ஈன்றாலும், கொண்டவன் விற்றவனுடனே அந்த மிருகங்களுக்கு விலை இன்ன தென்று பொருந்தி, எருவாங்கிக்கொண்டேனென்று சாட்சிவிட்டு ஒப்பனை பண்ணினதேயுண்டானால், அப்படி அவன் கொண்ட மிருகங்களும் அவைகளின் கன்றுக்குட்டிகளும் அவனுக்கே உடையவைகளாம். அந்த மிருகங்களில் உண்டான சேதங்களுக்குக் கொண்டவன் வழக்குச் சொல்லாமல் கையேற்க வேண்டும்.

யாதாமொருவன் யாதொரு எருத்து மாடென்கிலும் கடாமாடென்கிலும் இந்த விதப்பட்ட மிருகங்களை உழவு சீரித்த மாடொன்று விலை பொருந்திவிற்று,விலையும் வாங்கிக் கொண்டானாகில், அதன் பிறகு அந்த மாடுகள், உழவு சீரித்தவைகளல்லவென்று மாடு கொண்டவன் அறிந்தானாகில், பதினைந்து நாள் தவணைக்குள்ளாக மறுபடியும் அந்த மாடுகளைக் கொண்டு வந்து விற்றவனிடத்திலே ஒப்புக்கொடுத்துத் தன்னுடைய பணங் கேட்கலாம். விற்றவனும் அந்தப்பணம் கொடுக்கக் கடனாளியாயிருக்கிறான்.

இந்த விதமாக ஒருவருக்கொருவர் ஒரு பசுமாட்டையென்கிலும் எருமையையென்கிலும் ஒரு ஈற்று,அல்லது ஈற்று ஈன்ற மாடென்று சொல்லி விற்றதேயுண்டானால், சில காலத்திற் பிறகு அந்த மாடுகள் ஈனா மலடுகளென்று திடப்படக்காணப்பட்டதேயுண்டானால் அப்போது, கொண்டவன் அந்த மாடுகள் ஒன்றானாலும் அதிகமானாலும், விற்றவனிடமாக ஒப்புக் கொடுத்துத்தான் கொடுத்தவிலையைப் பற்றிக்கொள்ளலாம். ஆனால் ஒன்றரை வயசு அல்லது இரண்டு வயசுள்ள பசு நாகைக் கொண்டதேயுண்டானால் ஈனுகின்ற காலங்களுக்கு ஈன்றாலும் ஒருக்காலும் ஈனாமலடாய்ப் போனாலும்,அந்த மாடு கொண்டவனுக்குடையது தான். அதேனென்றால், அதிலேயொரு கள்ளமுங் காணப்படாது

### பிள்ளைகளை விற்றல்

3. பிதாவும் மாதவும் இவ்விடத்திற் செனனமாய் அடிமையல்லாதவர்களாயிருந்தாலும் பொறுத்த வறுமையின் நிமித்தம் தங்கள் பிள்ளைகளை விற்பார்கள். இவ்விதமான பிதாவும் மாதாவும் தகுதியுள்ளவர்களாகிய காலத்தில் நீதிக்காரர் சொல்லுகிற விலை நிதானத்தின் படி விலையாக கொடுத்துத் தங்கள் பிள்ளைகளை மீண்டுகொள்ளுகிறதற்கு அவர்களுக்குரித்துண்டு. முன் சொல்லப்பட்ட தன்மையான சிறைகளுக்கு உடையவனாயிருக்கிறவன் இந்த மீட்சிக்கு எதிரிடை செய்யவொண்ணாது.

இது ஒரு பழைய வழமை. என்னுடைய எண்ணத்தின் படிக்கும் அது நீதி தானென்று கண்டேன். இன்னும் என்னுடைய எண்ணம் ஒன்றுண்டு. அதென்னவெனில், மேற்சொல்லிய தனமையையுடைய சிறைகள் முன் சொல்லியிருக்கிற விதமாய் அடிமைத்தனத்திலே பூணடோமென்று ஒப்பனை பண்ணி வெளியரங்கமாகக் காண்பிக்கக் கூடுமேயானால், அப்போது அவர்களை அந்த உரித்திலிருந்து தவற விடவொண்ணாதென்பதே. அதேனென்றால் இவ்விடத்திலே செனனமான தன்னிட்டமான பேர்களை விலைப்படுத்தவொண்ணாதென்று முற்காலங்களிலே திட்டமாய் விளக்கியிருக்கிறது.

## அதிகாரம்-8

## ஆண்பெண் சிறைகளைப் பற்றியது

### சிறைகளின் வகை

1. இத்தேசத்திற் கோவியர், சான்றார், பள்ளர், நளவர் என நான்கு சாதிகளுண்டு. இவர்களிலே முதற் குறிக்கப்பட்ட இரண்டு சாதியாரும் ஆதி தொடுத்து உரிமை வழியாக வந்த சிறைகளாயிருந்தார்களோவென்பதை நிதானிப்பது பிரயாசம். ஏனென்றால் பழைய காலங்களிலே இந்த அடிமைகளில் சிலரைப் பிதாமாதாவென்கிலும் உறவு முறையாரென்கிலும மறு பேருக்கு விற்றதுமாக எண்ணப்படுகின்றது. பிரதானமாகப் கோவியரைப் பற்றியே இப்படியெண்ணப்படுகின்றது. அவர்களில் வெகுத்தம் பேர் இக் காலத்திற் சிறைகளாயிருக்கிறார்கள். முன் சிறைகளாயிராதவர்கள் சில உபாயத்தினாலே கோயிற்பட்டோலைகளிலுந் தோம்பிலுந் தங்கள் பேரைவேறே சாதிவரியில் எழுதுவித்துக் கொண்டார்கள் இப்போ கோவியரென்கிற சாதிக்குள்ளாக ஒருவரும் இட்டக்காரராயிருக்கவில்லை.

இரண்டாஞ்சாதியாகிய சான்றார் மெத்தக்கொஞ்சப் பேர் இவர்களிற் சிறைகளாயிருந்தவர்கள் தோம்பிலே சான்றாரென்றல்லக் கோவியரென்று எழுதப்பட்டார்கள். சிறைகளல்லாதவர்கள் இட்டக்காரராயிருந்து வெள்ளாளரைப்போலவே அரசாட்சியின் பணிவிடைகளைச் செய்கிறார்கள். இவர்கள் மாதத்தில் ஒவ்வொரு நாள் அரசாட்சியின் வழமையான ஊழியத்தைச் செய்வதல்லாமல் பள்ளர், நளவருடன் கூடி அரசாட்சியாரின் யானைகளுக்கு ஊர்தோறுமிருக்கிற யானைப்பந்திகளிலே தீன் தேடிக்கொடுக்கவும் மற்றுந் தலைவர்மார் புறப்பட்ட இடங்களிலே அவர்களுடைய பல்லக்குகளைக் காவிப் பயணத் தட்டுமுட்டுகளையும் சாமான்களையும் சுமக்கவும் வேண்டியவர்கள். மற்றும் இரண்டு சாதியாகிய நளம் புள்ளுக்கள் ஆதிகாலந்தொட்டு இந்தக் காலம் வரைக்கும் சிறைகளாகயிருக்கிறார்கள். ஆனால் உடையவர்கள் மனதிரங்கி இட்டமாக்கினாலுண்டு. அதுவும் சிறிது பேர் காணுங்காணாது போலவுமிருக்கிறது.

### சிறைகளின் விவாகம்

2. சிறைகளாயிருக்கிறவர்கள் விவாகம் பண்ண மனசாயிருக்கும் போது இன்ன பேர்களுடனே விவாகம் பண்ணப்போகிறேனென்று தங்கள் எசமான்களுக்கு அறிவித்து அவர்களுடைய சம்மதம் பெற்றுக்கொள்ளவேண்டியது. அவர்கள் சம்மதித்து உத்தரவு கொடுக்கில், அப்பொழுது கோயிற் சட்டம்பிமாருக்குக் காண்பிக்கும் படிக்குத் தங்கள கைச்சீட்டுக்கொடுப்பார்கள். அதன் பின்பு கலியாணம் நிறைவேறும்

எசமான்கள் தங்கள் ஆண் சிறைகள் தங்கள் சொந்தப் பெண் சிறைகளை விவாகம் பண்ணினாலேயல்லாமல் தங்கள் சம்மதஞ் சொல்லமாட்டார்கள். ஆகிலும் அப்படிச் செய்வதற்கு ஒவ்வாதிருந்தால்,தங்கள் ஆண் சிறைகள் பிற எசமான்களுடைய பெண் சிறைகளை விவாகம் பண்ண இடங்கொடுப்பார்கள்.ஆனால் அரசாட்சியாரின் ஆண் சிறைகள் பிற எசமான்களுடைய பெண் சிறைகளை விவாகம் பண்ணக்கூடாது. அரசாட்சியாரின் பெண்சிறைகளையே விவாகம் பண்ணவேண்டியது.

(தொடரும்)

## அரசியல் தஞ்சம் கோரியவர்களை திருப்பி அனுப்பும் முயற்சி தீவிரம்

கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம கோரி நிராகரிக்கப்பட்டவாகள் படிப்படியாகத் திருப்பி அனுப்பப்பட்டு வருவதாக மனித உரிமைகள ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு' வந்ததையடுத்து இலங்கையில் தமிழர்களுக்கு பாதுகாப்பு உள்ளது என்ற அடிப்படையில் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஐரோப்பிய நாடுகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றதாகவும் ஆணைக்குழு வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (தி-61,10)

## மட்டு. மாவட்டத்தில் போட்டியிட 7 பேர் தெரிவு

(மட்டக்களப்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு இதுவரை 7 தமிழ் உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக சங்கத்தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி, ரெலோ செயலாளர் நாயகம் பிரசன்னா இந்திரகுமார், ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் கிங்ஸ்லி இராசநாயகம், செல்வி கதிர்காமர் தங்கேஸ்வரி மற்றும் ஊடகவியலாளர்களான எஸ். ஆனந்தமூர்த்தி, பா.அரியநேத்திரன் ஆகியோரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காகப் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

## திருக்கேதீஸ்வரத்திலுள்ள படையினரை வெளியேறுமாறு குமரகுருபரன் வேண்டுகோள்

(கொழும்பு)

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயச் சுற்றாட்லில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்ற வேண்டுமென அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் செயலாளர் ந.குமரகுருபரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இநதுக்களின் சிறப்பு நாளான சிவராத்திரி தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது. எனவே, சிவராத்திரி தினத்திற்கு விசேஷடமாகப் பூஜை வழிபாடுகள் நடைபெறும் புகழ்பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு பக்தர்கள் எவ்வித இடையூறுகளுமின்றி செல்வதற்கு வழிவகைகள் செய்யவேண்டும்.

இதற்கு வசதியாக அவ் ஆலயச் சுற்றாடலில் உள்ள காவலரண்களில் நிலைகொண்டிருக்கும் படையினரை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும்.

இது விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வடக்கு-கிழக்கு மற்றும் மலையக மேல் மாகாணத் தமிழ் அரசியல் கட்சிகள் அனைததும் ஒன்றிணைந்து அழுத்தம் கொடுக்கவேண்டுமென குமரகுருபரன் மேலும் கேட்டுள்ளார். (தி-18)



சுன்னாகம் கோட்டைக்காடு அ.த.க.பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் புதிய மாணவர்கள் கலை நிகழ்வினூடாக வரவேற்கப்படுவதைப் படததில காணலாம்.



தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் கலந்துகொண்ட நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை ஆசிரியர் மற்றும் மாணவர்களைப் படத்தில் காணலாம்.

# வருமுன் காப்போமா?



தகவல் தொழில்நுட்பம் என்ற அதிவேக நெடுஞ்சாலையில் இளம் சமுதாயத்தினர் பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், திகிலூட்டக்கூடியதான ஒரு தரிப்பிடம் வரும்வரையில் எவ்வளவு தூரம்தான் அவர்களால் செல்ல முடியும்?

உடனடித் தகவல்களை வழங்கவல்லதும், நொடிப்பொழுதிலான தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்தித் தரக்கூடியதும், பாரிய திகில் காட்சிகளை முப்பரிமாணத்தில் பார்க்க வசதியளிப்பதுமான பல அற்புதங்கள் நிறைந்த நவீன கால தொழில்நுட்பத்தினை தாமாகவே விரும்பி ஏற்றுக்கொள்பவர்கள் சிறுவர்கள்.

**பின் விளைவுகள்**

ஆனால், தகவல் தொழில் நுட்பத்தால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றிய கவனம் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றது. சிறுவர்களுக்கான வீடியோ கேம்கள், கையடக்கத் தொலைபேசிகளுக்குச் செய்தி பரிமாறுதல் போன்றன சிறுவர்களை நிரந்தரமாகவே மீளாத்துயரில் தள்ளி விடுகின்றன.

தொடர்ந்தும் இத்தகைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகின்ற 9 வயதளவான சிறுவர்களை ஆராய்ந்தபோது அவர்கள் **RSI(Repetitive Strain Injuries-**மீண்டுவரும மிகையழுத்த நலிவுப் புண்) எனும் நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன், இத்தகையோர் தமது சப்பாத்துப்பட்டியைக் கட்டிக்கொள்வதற்குக் கூட முடியாதவர்களாகவும் தமது புத்தகப்பையை சுமந்துசெல்ல முடியாதவர்களாகவும் காணப்பட்டனர் என்று சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவர்களுக்கு ஏற்படவுள்ள நீண்ட கால இயலாமைக்கு இது ஒரு அறிகுறியாக உள்ளது.

**RSI** சங்கத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளராகிய அன்ட்ரு சட்விக் என்பவர் இதன் மூலம் ஒரு பேராபத்து நிகழவிருப்பதாகத் தெரிவிக்கிறார். இது ஒரு பாரதூரமான விடயமாகக் கருதப்படவேண்டியது. ஏனெனில், இந்த நலிவுநோய் வெளிப்பட நீண்டகாலம் செல்கின்றது. சிறுவர்கள் தமது வாழ்வின் ஆரம்பக் கட்டத்திலேயே தம்மைத்

வேண்டி ஏற்படுகின்றது. அவர்கள் நடுக்கம், மனக்குழப்பம் போன்ற வற்றுக்கு ஆளாகின்றார்கள்.

கைத்தொலைபேசிப் பாவனை நாளுக்குநாள் அதிகரித்துவரும் வேளையில், பிரிட்டனில் கடந்த பெப்ரவரியில் மட்டும் 1.53 பில்லியன் செய்திகள் பரிமாறப்பட்டுள்



ளன. ஆனால், 2002 பெப்பரவரியில் வெறும் 44 மில்லியன் மட்டுமே. இப்புள்ளிவிபரத்தை இத் தொலைபேசித் தரவுத்தளம் வெளியிட்டுள்ளது. 2002இல்

கின்றன. அண்மையில் லண்டனில் 11 தொடக்கம் 14 வயதிற்குட்பட்ட பாடசாலை மாண்வர்கள் மத்தியில் நடாத்திய ஆய்வொன்றின்போது அவர்களில் 49 வீதமானோருக்கு முன்னைய மாதங்களில் கழுத்துவலி ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இதுபோன்று

நெதர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 40 வீதமான பல்கலைக்கழக மாணவர்கள் **RSI** நோய்க்கு ஆளாகியிருந்தனர்.

கணனி போன்றவற்றுடன் விளையாடும்போது அவர்கள் வலியை உணர்ந்தால் அதனை அவர்கள் தங்களது தாயிடம் கூடத் தெரிவிக்கமாட்டார்கள்.

ஆனால், **RSI** நோய்கள் நீண்டகாலத்திற்கு இருக்கக் கூடியனவும், சமாளிப்பதற்குக் கஷ்டமானவையும் ஆகும்.

சிறுவர்களுக்கு முழுவாழ் நாளுமே இது கவலையளிக்கக்கூடிய ஒன்றாக இருப்பதால் அவர்களைப் பற்றி அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டும். உண்மையிலேயே

குழந்தை முழு அளவுக் கிரிக்கெட் மட்டையைத் தூக்கி விளையாடுவதும், பெரியவர்களின் சைக்கிளை ஓடுவதும் கவனிக்கப்படுவதில்லை. அதிக நேரங்கள் கழுத்தை மடக்கி வைத்திருத்தலும், கைகளை நீட்டி வைத்திருத்தலும் சிறுவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியன.

சிறுவர்களுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட

**தாரா**

கணனி முறைகள்ளயே பயன்படுத்தவேண்டும் என பேராசிரியர் பீற்றர் பக்கில் தெரிவிக்கிறார்.

இது பற்றி ஆசிரியர்களும், பெற்றோர்களும் போதிய கவனம் செலுத்தவேண்டும். மணிக்கட்டில் இருந்து ஏற்படும் வலி தொடக்கம் கழுத்துவலி வரை கவனிக்கவேண்டும். இதுபற்றிச் சிறுவர்களே வெளியிடத் தொடங்குவார்கள்.

இத்தகைய பிரச்சினைகள் ஏற்படும் எனில் கணனியைப் பயன்படுத்துவதைத் தடுக்கவேண்டும். இது அவர்களுக்கு நகைப்பிற்கிடமாக இருக்கும். இத்தகைய பிரச்சினைகள் ஏற்படாமல் தடுப்பது பற்றிப்

# வந்தபின் பார்ப்போமா?

பிரித்தானியச் சிறுவர்களில் 7தொடக்கம் 16 வயதுக் கிடைப்பட்டவர்களில் அரை வாசிப்பேர் தமக்கென ஒரு கைத் தொலைபேசியை வைத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களின் விரல்கள் எரிபொருள் இல்லாத எஞ்சினைப் போல செயலாற்றுகின்றன என அன்ட்ரு சட்விக் தெரிவிக்கின்றார். இதன் காரணமாக அவர்களின் விரல்களிலும் முன்கைப் பகுதிகளிலும் நாளடைவில் மூட்டுவலிகள் ஏற்படுவதற்கான

**வாலிபப் பருவத்தின் அன்றாட வாழ்க்கை ஆரம்பிக்க முன்னரே அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுகின்றது.**

தாமே அழித்துக்கொள்கின்றார்கள். அதுவும் நோய் வெளிப்பட்ட பின்னரேதான் என்பது கவலைக்குரியது.

வீடியோக்கேம் பாவனையால் **RSI** நோய் ஏற்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விடயம் என்னவென்றால், அவர்களின் பெருவிரல் அசைவுகள் அவர்கள் வழங்கும் கட்டளைகளுக்கு அமைய செயற்பட சிறந்த ஆதாரமாக விளங்குவதுதான்.

கையடக்கத் தொலைபேசிகளில் உள்ள மிகச்சிறிய பட்டன்களைத் தொடர்ந்து அழுத்துவதால் அவர்கள் எதிர்காலத்தில் பல பிரச்சினைகளைச் சந்திக்க

வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

இது இத்துடன் நின்றுவிடவில்லை. சிறுவர்கள் வளர்ந்து வரும்பொழுது, பாடசாலைகளிலும் வீடுகளிலும் கணனிக்கு முன்னால் பொழுதுபோக்கும் போதும் அவர்கள் மிகவும் குழப்பமான மனநிலையுடன் காணப்படுகின்றனர். அத்துடன் அவர்களுக்குத் தசைப்பிடிப்புப் போன்றவையும் ஏற்படுகின்றன.

**கணனிப்பாவனையால் வரும் உடலியற்பிரச்சினை**

அடுத்ததாக இளம் சமுதாயத்தினர் கணனிக்கு முன்னால் வளைந்து உட்கார்ந்திருப்பதாலும் அவர்களுக்கு முள்ளந்தண்டில் பிரச்சினைகள் ஏற்படு

அத்துடன், நீண்டகால விளைவாக இளம் சிறுவர்களில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற எலும்புகளும் தசைகளும் இதனால் வெளித்தெரிய ஆரம்பிக்கின்றன. காயம் ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் சில பெரும்பாலும் உள மகிழ்வைத் தரக்கூடியனவும் ஆகும். ஆனால், பிரச்சினைகள் வெளிப்படுவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றது. ஆனால், இதற்குள் பாரதூரமான சேதங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

லண்டனில் உள்ள றோயல் அபடீன் சிறுவர் வைத்திய சாலையில் குழந்தைகள் விபத்துப் பிரிவின் நிபுணர் 2001 இல் **RSI** சம்பந்தமான மாநாட்டில் இதற்குக் காரணமான கணனிக் கேம்கள் என வலுயுறுத்தினார். அதற்கு உதாரணமாக அவர் கைவலி காரணமாகப் பாடசாலையில் 11 வயதான சிறுவன் ஒருவன் பேனாவைப் பிடிக்கவே கஷ்டப்படுகின்றான் எனத் தெரிவித்தார். ஆனால், **X-Ray** யின் படி கைகளில் குறைபாடுகள் எதுவும் இல்லை. இச்சிறுவனைக் கணனிக்கு முன்னாள் சில மணிநேரம் அவதானித்தபோதே கைகளில் தசை நாண்கள் பாதிக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. இதற்கு 'நின்ரென் டொனிரிஸ்' **(Ninten donitis)** எனப் பெயரிட்ட இந்நிபுணர் இது தனிவேறான ஒன்றல்ல எனவும் தெரிவிக்கிறார்.

சிறுவர்கள் மடத்தனமானவர்கள் அல்லர். அவர்களுக்குச் சந்தோசம் தரக்கூடியனவான

இந் நிபுணரான மக்ரகரின் மகள் கூட பல்கலைக் கழகத்தில் வைத்துக் கணனியில் பாடங்களைப் பதிவு செய்து வந்ததாலும் **RSI** நோய்க்கு ஆளானார். மணிக்கட்டில் உபாதையும் ஏற்பட்டது. தற்போது இந்நோயிலிருந்து விடுபட்டுள்ள இம்மாணவி தற்போது வேறு தொழில் செய்து வருகின்றார். இதன்பின்னர் மேற்கூறிய வியாதிகள் அவருக்கு ஏற்படவில்லை. ஆனால், இது மன ஆறுதல் அடைவதற்குப் போதுமானதல்ல. லண்டனில் பாடசாலை மாணவிகளிடையே ஆராய்ந்தபோது, பள்ளிப்பருவத்தில் குறைந்தளவு மட்டும் முதுகுவலியுடையவர்கள் வாலிபப் பருவத்தில் கணிசமான அளவு இவ்வலியால் அவதிப்படுகின்றனர் எனத் தெரியவந்தது. வாலிபப் பருவத்தில் அன்றாட வாழ்க்கை ஆரம்பிக்க முன்னரே அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுகின்றது. இவ்வாறு அப்பேராசிரியர் எச்சரிக்கை செய்தார்.

**மீட்சிபெற வழியுண்டா**

பாடசாலைகள், கல்லூரிகளில் சிறுவரின் உடல்நிலை பற்றி மதிப்பீடுகள் செய்யப்படவேண்டும். பாடசாலை, வீடுகளில் பிள்ளைகளின் அளவீடுகள் மிக அரிதாகவே அளக்கப்படுகின்றன.

பெரும்பாலான பெற்றோர் இது பற்றி அக்கறைப்படவில்லை. உதாரணமாக 8வயதான

பெற்றோர்களுக்குக் கல்வி புகட்டுவது முக்கியமானது. பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றிப் பெற்றோர் அறிந்துகொள்வார்கள் என நான் நினைக்கவில்லை என மக்கிரகர் தெரிவிக்கின்றார்.

இதற்கென அமெரிக்காவில் பாடசாலை மாணவர்களுக்கு கைகளுக்கென விசேட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. கணனியைப் பயன்படுத்த முன்னரும் பின்னரும் விரல்களை நீட்டி மணிக்கட்டை அசைத்துப் பயிற்சிகள் செய்விக்கப்படுகின்றன. கணனியைக் குறிப்பிட்ட அளவு நேரமே பய்ன்படுத்த வேண்டும் என பிள்ளைகளுக்கு பெற்றோர் அளுத்தம்கொடுக்கவேண்டும் என்றும் மக்கிரகர் கூறுகின்றார்.

இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிடில் பயங்கர விளைவுகள் ஏற்படும் என **RSI** மருத்துவ நிபுணர் ஒருவர் தெரிவித்தார். அவரின் நிறுவனம் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் எவ்வாறு **RSI** ஏற்படுவதைத் தவிர்ப்பது என விளக்கமளித்து வருகின்றது.

இதற்காக அவர் தமது சப்பாத்துப் பட்டியைக் கட்டமுடியாத, காற்பந்து விளையாட முடியாத, எழுத முடியாத, புத்தகப்பை சுமக்கமுடியாத 9 வயதுக் குழந்தைகளைத் தேடி வருவதாகத் தெரிவிக்கின்றார்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சி முன்னேற்றம் கண்டுள்ள வேளையில், இதனால் ஏற்படக்கூடிய ஆரோக்கியக்கேடுகளை, ஆபத்துக்களை இளம் சமுதாயத்தினர் பெற்றுக்கொள்கின்றார்கள்.

# ஜே.வி.பி.இனவாதக் கட்சியல்ல

# விளக்குகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

நாங்கள் இனவாதிகள் அல்ல. எமது கட்சியும் இனவாதக் கட்சியல்ல. மக்களின் உரிமைகள் மீறப்படுகின்றபோது, நசுக்கப்படுகின்றபோது அதற்கு எதிராகக் குரல்கொடுக்கின்ற மனிதாபிமானமுடைய கட்சி என்பதை வடக்கு-

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்வில் விமல் வீரவன்ச வெளியிட்ட கருத்துக்கள் இங்கே தரப்படுகின்றன.**

கிழக்கு மாகாணத்தில் வாழும் சிறுபான்மையின மக்களுக்கு கூறி வைக்க விரும்புகிறேன் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

### இனவாதக்கட்சி

"மக்கள் விடுதலை முன்னணி ஓர் இனவாதக்கட்சி அது தமிழ் மக்களற்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்ற கட்சி'' என்றெல்லாம் பல ஊடகங்கள் எம்மை கடுமையாக விமர்சித்து வருகின்றன.

இத்தகைய விமர்சனங்களுக்கு பின்னணி வகிக்கின்றவர்கள் ஐக்கிய தேசிய முன்னணியினர்தான். அவர்களுக்குத் தெரியும் எதிர் வரும் பொதுத் தேர்தலில் "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே'' வெற்றி பெறும் என்பது.

இதனாலேயே அவர்கள் இவ்வாறு எம்மை விமர்சித்து தமிழ்-முஸ்லிம் மக்களிடையே எம்மை இனவாதக் கட்சியாக சித்தரித்துக காட்டி தமிழ்- முஸ்லிம் மக்கள் மத்தியில் ஓர் வெறுப்புணர்வை வளர்த்துக்கொள்ள முயற்சிக்கின்றார்கள்.

இவர்களின் விமர்சனங்களுக்கு தமிழ் ஊடகங்களும் துணை போகின்றன. இதனால் தமிழ்-முஸ்லிம மக்கள் எம்மை இனவாதக் கட்சியாக எண்ணி எமது கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். எமது கட்சி மீதும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை.

"ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி'' ஆட்சிக்கு வந்தால், மீண்டும் போர் வெடித்து விடும் என அஞ்சுகின்றார்கள். இவ்வாறு மக்கள் அஞ்சுவதற்குக் காரணம் ஐக்கியதேசிய முன்னணியின் பொய்ப பிரசாரங்களே.

ஐக்கியதேசிய முன்னணியினர் தாம் அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காகவே இவ்வாறு பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்கின்றார்கள்.

எனவே, இப் பொய்ப் பிரசாரங்களை நம்பி தமிழ்பேசும் மக்கள் தங்களின் நிம்மதியை இழக்கப் போகின்றார்கள்.

அவ்வாறு "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி'' ஓர் பயங்கரவாத அமைப்பாகவிருந்தால் இன்று தென்னிலங்கை மக்களின் பெருமளவு ஆதரவைப் பெற்றிருககாது.

மக்கள் மட்டுமன்றி மதத் தலைவர்கள் ,கல்விமான்கள் ,சர்வதேச அமைப்புக்கள், நிறுவனங்கள், இடது சாரிக்கட்சிகள் என்பன கூட எமது முன்னணிக்கு பூரண ஆதரவு வழங்கி வருகின்றன.

### கட்சிகளின் இணைவு

இடதுசாரிக் கட்சிகள் பல தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து வருகின்றன.

இடதுசாரிக் கட்சிகள் பொருளாதாரம் , நாட்டுநலன் ஆகியன ப்ற்றி சிந்திக்கும் கட்சிகளாகும. "எல்லோரும் எல்லாம் பெற்று வாழ வேண்டும். சகல இன மக்களையும் சகோதர இனமாக நேசிக்கவேண்டும்" என்ற கொள்கைகளையுடைய இக் கட்சிகள் கூட எமது முன்னணியுடன் இணைந்திருக்கின்றன.

எனவே, தமிழ்பேசும் மககள வீணாக அச்சம் கொண்டு மனதை அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

அத்துடன், தமிழ்பேசும் மக்கள் தங்கள் பிரச்சினைகளை சுதந்திரமாகத் துணிந்து எமக்கு எடுத்துக் கூறலாம். அவ்வாறு அவர்கள் தமது பிரச்சினைகளை எமக்கு எடுத்துக்கூறினால் நாம் உடனடியாக அதற்குத் தீர்வு காணுவோம். ஐக்கிய தேசிய முன்னணி போன்று இழுத்தடிக்க மாட்டோம்.

சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி 2 வருடங்களாக என்ன செய்தது?

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட ஐக்கிய தேசிய முன்னணி சமாதானத்தை ஏற்படுத்துவதாகக்கூறி சாவதேச நாடுகளிடம் நிதியைப பெற்றுக்கொண்டது.

### பிரதமரின் பூச்சாண்டி

சர்வதேச நாடுகளின் நிதியைப் பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசு நாட்டை அபிவிருத்தி செய்யப்போவதாக பூச்சாண்டி காடடி விட்டு, அமைச்சர்களின் பொக்கற்றுக்குள் நிதியைப்போட்டுவிட்டது.

அமைச்சர்கள் சொகுசு வாகனங்களில் ஓடித்திரிவதிலும் வெளிநாடுகளுக்கு அடிக்கடி சுற்றுப்பயணத்தை மேற்கொள்வதிலும் அதிக ஆர்வம் காட்டினார்கள்.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளுடன் திரைமறைவில் பேசி, அவர்களுக்கும் சில உதவிகளைச் செய்து கொடுத்து வந்ததையும் நாம் அறிவோம்.

இவ்வாறு மக்களை ஏமாற்றி வந்த அரசு இறுதியில் மக்கள் மீது பெரும் சுமையை ஏற்படுத்தக்கூடிய வகையில் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தது.

அதாவது, வற் வரி மூலம் அத்தியாவசியப்பொருட்களின் விலைகளையும் அதிகரிபபுச் செய்தது.

இதற்கிடையில் புலிகளுடன பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இடைக்கால நிர்வாகசபையொன்றை வடக்கு-கிழக்கு மாகாணததில் அமைக்கப் போவதாகக் கூறி, விடுதலைப்புலிகளுக்கு அது தொடர்பான திட்டவரைபு ஒனறையும் சமர்ப்பித்திருந்தது.

அந்தத் திட்டவரைபில் என்ன உள்ளடக்கபபட்டிருக்கின்றது என்பது எந்தவொரு அரசியல் கட்சிகளுக்குமோ அன்றி ஜனாதிபதிக்கோ எதுவும் தெரியாது. ஏன் மக்களுக்கும் கூட இதுபற்றி ஒன்றும் தெரியாது.

இதனால் நாம் அரசின் இச் செயலைக் கண்டித்தோம். ஜனாதிபதியை கைப்பொம்மையாக வைத்துக்கொண்டு செயற்படும் பிரதம்ரின் போக்கையும் எதிர்த்தோம்.

இதேவேளை, ஜே.வி.பி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுசேர்ந்தபோது, கைச்சாத்திடபபட்ட ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை சகல மக்களுக்கும் சகல அரசியல் கட்சிகளுக்கும் ஏன் பிரதமருக்கும் கூடத் தெரியபபடுத்தும் வகையில் மும்மொழிகளில் விளக்கமாக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தோம்.

எனவே, நாம் மக்களுக்குத் தெரியாமல் எதுவும் செய்யமாட்டோம். மக்களின் கருத்துக்களைக் கேட்டு அவர்களின் விருப்பத்திற்கு அமைவாகவே செயற்படுவோம்.

### காலாவதியான ஒப்பந்தம்

இதேசமயம், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது.

பரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான நடவடிக்கையில் இருந்து எனறு விலகினாரோ அன்றே யுத்த நிறுத்த ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகி விட்டது.



ஆனாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் யுத்த நிறுத்தததைத் தொடர்ந்து கடைப்பிடிப்போம் என உறுதியளித்திருப்பதால், மக்கள் தற்போது கொஞ்சம் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழுகின்றார்கள்.

ஐக்கிய தேசிய முன்னணி மீணடும் ஆட்சிக்கு வந்தால், மக்களின சந்தோஷத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விடும என்பதையும் மக்களுக்கு கூறி வைக்க விரும்புகின்றேன் .

இது ஒருபுறமிருக்க, நாட்டை 3 பாகங்களாகப் பிரித்து தமிழ் மக்களுக்கு ஒரு பகுதியென்றும் சிங்கள மக்களுக்கு இன்னொரு பகுதியென்றும் முஸ்லிம் மக்களுக்கு மற்றொரு பகுதியென்றும் கொடுத்து நாட்டை பிளவுபடுத்தி, நாட்டிலுள்ள மூவின மக்களையும் வேறுபடுத்தி அவர்களின் இன ஒற்றுமையை சீர்குலைததுக்கொள்ள நாம் விரும்பவில்லை. எதியோப்பியா பொஸனியா போன்ற நாடுகள் இவ்வாறு நாட்டைத் துண்டாடி படும்பாட்டையும் நாம் அறிந்துள்ளோம்.

இதனாலேயே புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை நிராகரித்தோம். முஸ்லிம் மக்களும் எமது சகோதர இனமே. அவர்களையும் இந்த விடயத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும.

### அரசியல் யாப்பில் திருத்தம்

அத்துடன், இனப்பிரச்சினைகுத் தீர்வுகாண அரசியல் யாப்புத் தடையாக இருக்கின்றதாகக் கூறபபட்டுவருவதால், நாட்டு மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடிய வகையில் அரசியல் யாப்பை திருத்த வேண்டும்.

அதற்கு எமது பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் நலனை மட்டும் கருத்தில் கொள்ளாது நாட்டின் சகல பகுதி மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அரசியல்யாப்பு சீர்திருத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு ஆகும். இதே சமயம் , அரசியல் யாப்பு முறைகளிலும் தேர்தல் முறையிலும் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என அரசியல் கட்சிகள் கூறிவருகின்றன.

இவையெல்லாம் சாதாரண மனிதனின் உரிமைகளைப் பாதுகாக்குமா? அல்லது அம் மனிதனின தேவைகளைப் பூர்த்தி செய்யுமா? என்பதைப் பார்ப்பதில்லை.

எமது நாட்டில் வாழும் பிரஜை நிம்மதியாக வாழ்வதற்குக் கூட உரிமையில்லை. அந்த அளவுக்கு மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன.

இத்தகைய நிலையில் தமது அரசியல் இலாபங்களுக்காக இந்த அரசியல்வாதிகள் இவ்வாறு கூறிவருவது மக்களை ஏமாற்றுவதற்காகவே.

எனவே, நாட்டு மக்கள் யதார்த்தமாக வாழக்கூடிய நிஜமான வாழ்வியல் கோலங்களைப் பிரதிபலிககக் கூடிய வகையிலும், மனித உரிமைகளை பாதுகாக்கக கூடிய வகையிலும் ஓர் அமைப்பொன்றை உருவாக்க அரசியல் கட்சிகள் முன்வரவேணடும்.

அரசியல் யாப்பை சீர்திருத்துவதனாலேயோ, தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதாலேயோ மக்களுக்கு எந்த வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

இதேவேளை, சமாதான முயற்சிகள் குழம்புகின்றபோது , அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வரும் பட்சத்தில், சமாதான முயற்சிகள் குழம்பினால் நாம் தமிழ் மக்களைப் பாதிக்காத வகையில சில நடவடிக்கைகளை மேற்கொண்டு, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம். நாம் வலிந்து போருக்குப்போக மாட்டோம்.

அத்துடன், சமாதான முயற்சிகள் குழம்பும் என்று நாம் எதிர் பார்க்கவுமில்லை.

சமாதானத்தை ஏற்படுத்தும் விடயத்தில் நாம் மிகவும் அக்கறையுடனும் அவதானத்துடனும் செயற்படுகின்றோம். தொடர்ந்தும் அவ்வாறே செயற்படுவோம்.

எனவே, தமிழ் மக்கள் இது விடயத்தில் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அத்துடன்,கடந்த காலங்களில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் இடம்பெற்ற "பொங்கு தமிழ்'' நிகழ்வுகளில் புலிகள் தமிழ் மக்களை ஆயுத முனையில் அச்சுறுத்தியே பங்கேற்கச் செய்தனர் என்பதும் எமககுத் தெரியும்.

தமிழ் மக்களை ஆயுத முனையில் அச்சுறுத்தி வரும் விடுதலைப் புலிகள் அவர்களிடம் இருந்து பலவந்தமாக பணம் பறிப்பதாகவும் கேள்விப்பட்டோம்.

தமிழ் மக்களைப் பணயமாக வைத்து விடுதலைப்புலிகள் தமது காரியங்களை சாதித்துக கொள்வதுடன், அரசிடம் அதிகாரத்தைப் பறித்துக் கொள்ளவும் முயற்சிக்கின்றார்கள். இவர்களால் தமிழ் மக்கள் தமது கருததுக்களைக் கூற அஞ்சுகின்றார்கள்.

ஆயினும், தமிழ் மக்களின் நலன் கருதி நாம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடாத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்றார். (தி-60,10)

---

## ஊனமுற்றோருக்கு உதவி வழங்கும்

## தொண்டர் பயிற்சிநெறி ஆரம்பம்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட செயலகததினால் நடாத்தப்படும் ஊனமுற்றவர்களுக்கு உதவுவதற்கான 'தொண்டர் பயிற்சி நெறி' நேற்று முன்தினம் கரைச்சிப் பிரதேச செயலகமண்டபத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் தலைமையில் ஆரம்பமானது. மேற்படி பயிற்சி நெறியை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இப் பயிற்சி நெறியில் ஊனமுறறவர்களின் ஆளுமையினையும் ஆற்றல்களையும் திறமைகளையும் வளர்த்துச் சமூகத்தில் அவர்களையும் சரி சமமாக வாழ வைத்தல் தொடர்பாக தொண்டர்களுக்குச் சிறந்த பயிற் சிகள் வமங்கப்பட்டன.

தொண்டர்களுக்கான இப் பயிற்சி நெறி நேற்று முன்தினம் ஆரம்பமாகி எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கரைச்சிப பிரதேசத்திலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 60 தொண்டர்கள் பங்குபற்றுகினறனர். (தி-35)

### உறுப்பினர் தெரிவு

(வடலியடைப்பு)

மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கத்தின் 16வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அணமையில் கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.இக கூட்டத்தில் மா.செல்வராசா தலைவராகவும், ச.கந்தசாமி உபதலைவராகவும் தெரிவுசெய்யபபட்டுள்ளனர். (தி-21)

# விளையாட்டுச் செய்திகள்

## இலங்கை அணியின் நிலைகுறித்து ஆஸி. அணியினர் விளக்கம்

இலங்கைக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய ஒரு நாள் கிரிக்கெற அணியினர் கொழும்பு ஆர். பிறேமதாஸ விளையாட்டரங்கில் பயிற்சிகளில் ஈடுபட்டுவருகிறனர்.

இப் பயிற்சிகளின் போது அவுஸ்ரேலிய கிரிக்கெற் அணியின் உபதலைவர் அடம்ஸ் கில்கிறிஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை அணி தமது தாயகத்தில் சிறப்பாக வியைாடுகின்றனர். அது இம்முறையும் தொடரும் என நம்புகிறேன். விஷேடமாக முரளிதரன் சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவர். அவர் ஒருநாள் போட்டிகளில் போல, டெஸ்ட் போட்டிகளிலும் எதிரணிக்கு சவாலாக விளங்குகிறார். அதேபோல் ஒருநாள் போட்டிகளில் சமிந்த வாஸ் தற்போது உலகில் உள்ள சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவராகத் திகழ்கின்றார். கடந்த போட்டிகளில் இவரின் பந்து வீச்சுப் பாணி குறித்து நல்ல அனுபவம் இருக்கிறது.

அதனால் சாதாரணமான மனப்பாங்குடன் நாம் போட்டிகளில் விளையாடுவோம் என்றார்.

அதேவேளை, அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹெயடின் கருத்துத் தெரிவிக்கையில்,

அவுஸ்திரேலிய அணியிடம் பலமான துடுப்பாட்ட வரிசை இருக்கிறது. இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் சிறந்த பந்துவீச்சாளர். அவர் குறித்து நாம் ஆராய்ந்துள்ளோம். முரளிதரன் அவுஸ்திரேலிய அணிகெதிராக சிறப்பாகத் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார். எனினும கடந்த சில ஆண்டுகளாக எமது துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகவும் திறமையாகவும் விளையாடி வருகின்றனர். விசேடமாக எமது அணித்தலைவர் றிக்கிப் பொண்டிங், உபதலைவர் அடம்ஸ் கில்கிறிஸ்ற், டேமியன மார்ட்டீன் ஆகியோரும் சிறப்பாக விளையாடுகின்றனர்.

அந்த வகையில், எமது அணி வீரர்கள் அவுஸ்திரேலியாவுக்கு வெளியே அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இது சிறப்பான சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

(தி-121)

## கிரிக்கெற் வாழ்வில் இருந்து ஓய்வு பெறுகிறார் மார்க்வோ

சுமார் 20 வருடகால கிரிக்கெற விளையாட்டில் ஈடுபட்டு வந்த அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெற் வீரரும், முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வோவின் சகோதரருமான



மார்க்வோ அடுத்த மாதத்துடன் தனது கிரிகெற் வாழ்வில் இருந்து ஓய்வுபெறவுள்ளார்.

2002ஆம ஆண்டு சர்வதேச ஒரு நாள் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் சர்வதேச கிரிக்கெற் துறையில் இருந்து ஓய்வுபெற்ற 38 வயதுடைய மார்க்வோ அடுத்த மாதம் முதல்தர கிரிக்கெற் பருவ கால முடிவின்போது ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

தனக்கு வயது அதிகரித்துக் கொண்டு செல்வதால் கிரிக்கெற் துறையில் இருந்து ஓய்வுபெறும் தருணம் இதுவே என்று சிட்னியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மார்க்வோ இவ்வாறு தெரிவித்தார்.

மார்க்வோ 1985ஆம் ஆண்டு பருவகாலத்தில் முதல்தர கிரிக்கெற் போட்டிகளில் விளையாட ஆரம்பித்தார். எவ்வாறாயினும் 1991ஆம் ஆண்டிலேயே அவருக்கு டெஸ்ட் அணியில் இடம்கிடைத்தது. மூத்த சகோதரர் ஸ்ரீவ்வோவிற்கு பதிலாக அணியில் இடம்பிடித்த மார்கவோ தான் இடம்பெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்துக்கெதிராக சதத்தினைக் குவித்ததன் மூலம் அணியில் நிலையான இடம் பிடித்தார். நியூஸ் சவுத்வேல்ஸ் அணிக்காகத் தொடர்ந்து விளையாடிவரும் மார்க்வோ, 1991ஆம் ஆண்டு மேறகு அவுஸ்திரேலியாவுக்கெதிரான போட்டியல் தனது இரட்டை சகோதரரான ஸ்ரீவ்வோவுடன் 5வது விக்கெற்றில் 464 ஓட்டங்களைப் பகிர்ந்து உலக சாதனையை நிலை நாட்டியிருந்தார்.

366 முதல் தரப் போட்டிகளில் விளையாடிய மார்க்வோ 81செஞ்சரிகள், 132அரைச்சதங்கள் உட்பட 26ஆயிரத்து 765ஓட்டங்களைப பெற்றுள்ளனர். அத்துடன் 208விக்கெற்றுக்களையும் 450 பிடிகளையும் எடுத்துள்ளார்.

128 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய மார்க்வோ 20செஞ்சரிகள் 47அரைச் சதங்கள் உட்பட 8ஆயிரத்து 29ஓட்டங்களைப் பெற்றதுடன், 59டெஸ்ட் விக்கட்டுக்களையும், 181பிடிகளை எடுத்து டெஸ்ட் போடடிகளில் பிடிகளுக்கான உலக சாதனை படைத்திருந்தார். அததுடன் 244ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய சிலர் 18 சதங்கள், 50அரைச்சதங்கள் உட்பட 8ஆயிரத்து 500ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மற்றும் 85 விக்கெற்றுக்களையும் 108பிடிகளையும் எடுத்துள்ளார்.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்டுள்ள மார்க்வோவுக்கு கிரிக்கெற் வாழ்வில் 1998ஆம் ஆண்டு கரும்புள்ளி ஒன்று குத்தப்பட்டது. இந்திய பந்தயக் காரர்களுக்கு ஆடுகளத்தைப் பற்றியும் காலநிலை பற்றியும் பணத்துக்காக தகவல் கொடுத்ததை ஒப்புக்கொண்டதையடுத்து ஷேன்வோனுடன் சேர்த்து இவரும் சாச்சைக்கு உள்ளானார். எவ்வாறாயினும் விசாரணைகளையடுத்து அவர் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(தி-121)

## ஆஸி. அணிக்கெதிராக அதிரடியாக ஆடவேண்டும்

### அத்தப்பத்து வீரர்களிடம் வேண்டுகோள்

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியை ஒருநாள் போட்டிகளில் வெல்வதற்கு அதிரடியான துடுப்பாட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை ஒருநாள் கிரிக்கெற் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து இலங்கை அணி வீரர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

1996ஆம் ஆண்டு உலகககிண்ணத்தை வெல்வதற்கு வழிகோலிய இயல்பான திறமைகளை வெளிப்படுத்தி விளையாட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

உலகிலேயே சிறந்த அணியாகக் கருதப்படும் அவுஸ்திரேலிய அணிக்கெதிராக சொந்தப் பாணியில் விளையாடுவது இன்றியமையாதது. உலகச் சம்பியனான அவுஸ்திரேலியாவின் நற்பெயருக்கு அடிபணிந்து விடக்கூடாது எனவும் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள முத



லாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் எமது அணி வீரர்கள் சிறப்பாக விளையாடுவார்கள் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

(தி-121)

## ஊர்காவற்றுறைப் பிரதேச எல்லே போட்டி முடிவுகள்

வடககு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டுவரும் ஊர்காவற்றுறை பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற எல்லேப்போட்டி முடிவுகளின் படி ஆண்கள் பிரிவில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணியும், பெண்கள் பிரிவில் சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியும் சம்பியன் பட்டங்களை வென்றெடுத்தன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழத்தினர் தம்மை எதிர்த்து விளையாடிய ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழகத்தினரை 2:1என்ற பெறுபேறுகளின்படி வெற்றிகொண்டு சம்பியன் பட்டத்தினைத் தனதாக்கிக்கொண்டனர்.

பெண்களுக்கான எல்லே இறுதிப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாடடுக்கழகத்தை எதிர்த்தாடிய ஊர்காவற்றுறை சென்ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தினர் 2:0 என்ற பெறுபேறுகளினடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தினைத் தனதாக்கிக்கொண்டனர்.

(தி-68)

## ஐ.சி.சி.கிண்ண மினி உலகக் கிறிக்கெற் தொடர் செப்.10ல் இங்கிலாந்தில் ஆரம்பம்

2004ஆம் ஆண்டின் ஐ.சி.சி. மினி உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டிகள் இங்கிலாந்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. செப்ரெம்பர் 14ஆம் திகதி இலங்கை அணி சிம்பாப்வே அணியுடன் மோதவுளளது. அதேநேரம் இறுதிப் போட்டி 25ஆம் திகதி இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நடைபெறும்.

2002ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை இந்திய அணிகள் இணைச்சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. டெஸ்ட் அந்தஸ்து பெற்ற 10நாடுகளும் தகுதிகாண் போட்டிகளில் சம்பியனாகும் அணி, கென்யா அணி ஆகிய 12நாடுகளின் அணிகள் இத் தொடரில் பங்குபற்றவுள்ளன.

இது தொடர்பான தகவலை ஐ.சி.சி.வெளியிட்டுள்ளது.

இப் போட்டித் தொடருக்கான 12 அணிகளும் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பிரிவு ஏ-அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தகுதிகாண் அணி.


பிரிவு பி-தென்னாபிரிக்கா, மேற்கிந்தியா, பங்களாதேஷ்.

பிரிவு சி-பாகிஸ்தான், இந்தியா, கென்யா.

பிரிவு டி-இலங்கை, இங்கிலாந்து, சிம்பாப்வே. (ச-121)

### போட்டி விபரங்கள்

| திகதி | மோதும் அணிகள் | மைதானம் |
|---|---|---|
| செப்ரெம்பர்-10 | இங்கிலாந்து-சிம்பாப்வே | எட்பஸ்டன் |
| செப்ரெம்பர்-10 | நியூசிலாந்து- தகுதிகாண் நாடு | ஓவல் |
| செப்ரெம்பர்-11 | இந்தியா- கென்யா | சதம்டன் |
| செப்ரெம்பர்-12 | தென்னாபிரிக்கா- பங்களாதேஷ் | எட்பஸ்டன் |
| செப்ரெம்பர்-13 | அவுஸ்திரேலியா- தகுதிகாண் நாடு | சதம்டன் |
| செப்ரெம்பர்-14 | பாகிஸ்தான்- கென்யா | எட்பஸ்டன் |
| செப்ரெம்பர்-14 | இலங்கை- சிம்பாப்வே | ஓவல் |
| செப்ரெம்பர்-15 | மேற்கிந்தியா- பங்களாதேஷ் | சதம்டன் |
| செப்ரெம்பர்-16 | அவுஸ்திரேலியா- நியூசிலாந்து | ஓவல் |
| செப்ரெம்பர்-17 | இலங்கை- இங்கிலாந்து | சதம்டன் |
| செப்ரெம்பர்-18 | தென்னாபிரிக்கா- மேற்கிந்தியா | ஓவல் |
| செப்ரெம்பர்-19 | இந்தியா- பாகிஸ்தான் | எட்பஸ்டன் |
| செப்ரெம்பர்-21 | அரையிறுதிப் போட்டி பிரிவு ஏ-பிரிவு டி வெற்றி பெறும் அணி | எட்பஸ்டன் |
| செப்ரெம்பர்-22 | அரையிறுதிப்போட்டி பிரிவு பி -பிரிவு சி- வெற்றிபெறும் அணி | எட்பஸ்டன் |
| செப்ரெம்பர்-22 | இறுதிப் போட்டி | ஓவல் |



அவுஸ்திரேலிய சிட்னி நகரில் நடைபெற்ற தமிழர் விளையாட்டு விழா நிகழ்வுப் படங்கள்.

## இன்று ஒரு தகவல்

# புரிந்து கொள்ளுங்கள்

"என்ன சார் வாழ்க்கை இது... ஒரு நிம்மதியே இல்லை'' என்றார் ஒருவர். "ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள?'' என்று கேட்டேன். "வீட்டுக்குப் போனால் பிரச்சினை வெளியில் வந்தால் பிரச்சினை. எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு பிரச்சினை வந்து கொண்டேயிருக்கின்றது. எப்படி சார் மனிதன் நிம்மதியாக இருக்க முடியும்?'' என்றார்.

இப்படித் தான் நம்மில் பலர் இன்று இருக்கின்றோம். ஆனால் நிபுணர்கள் என்ன சொல்கின்றனர் தெரியுமா? ஒரு மனிதன் பிரச்சினை எதுவும் இல்லாமல் இருந்தான என்றால் அவன் சந்தோஷமாக இருப்பதாக அர்த்தம இல்லை என்கின்றனர். கஷ்டங்களை ஜெயிக்க வேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். அதில் தான் சந்தோஷமே இருக்கின்றதாம்.

உலகில் பிரச்சினை இல்லாத மனிதனே கிடையாது! நம் எல்லோருக்கும் பிரச்சினையுண்டு. ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பிரச்சினைகள் உண்டாவதும் உண்டு! இது ஒரு தொடர் கதை. ஒரு பிரச்சினையுண்டாகும் போது அந்தச் சமயத்தில் அது சிரமமாகத் தெரியும். அதுவும் நன்மைக்குத்தான் என்பதை நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

வாழ்க்கையில் தடைகள் வேண்டும். சோதனைகள் வேண்டும். பிரச்சினைகள் வேண்டும். இவையெல்லாம் இல்லாது போய்விட்டால் வாழ்வில் அர்த்தமே இல்லாமல் போய்விடும். அதனால் நாம் பிரச்சினைகளை உற்சாகமாக எதிர்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால், இன்று நாம் என்ன செய்கின்றோம். பிரச்சினை என்று ஒன்று வந்துவிட்டால் அதைத் தீர்ப்பது எப்படி என்று யோசிப்பதில்லை. அதிலிருந்து தப்பிப்பது எப்படி என்றுதான் யோசிக்கின்றோம். ஒரு உண்மை என்ன தெரியுமா? ஒரு பிரச்சினையிலிருந்து தப்பிப் போவதற்காக நமக்கு எவ்வளவு சக்தி தேவைப்படுகின்றதோ அதே அளவு சக்திதான் பிரச்சினையைப் புரிந்து கொண்டு அதை ஜெயிப்பதற்கும் தேவைப் படுகின்றதாம். இது சும்மா விளையாட்டுக்குச் சொல்லும் வார்த்தையில்லை.

நிபுணர்கள் கூறும் வார்த்தை. ஒரு பிரச்சினையிலிருந்து தப்பிப்போவதற்கு நாம் முயற்சித்தால் அது நம்மைத் தொடர்ந்து வந்து கொண்டேயிருககும். பிரச்சினையை நன்கு புரிந்து கொண்டு அதைத் தீர்க்க முயலும்போது அது முழுதாக விலகிப்போய் விடும்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் "புரிந்து கொள்ளுதல்'' என்பது முக்கியமான விடயம். பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயற்சிக்கும் நிபுணர்கள் முதலில் கூறும் வார்த்தை "அதைப் புரிந்து கொள்ளுங்கள்'' என்பது தான்.

"எந்த அளவுக்கு ஒருவன் பிரச்சினையின் யதார்த்தத்தை நேர்முகமாகச் சந்திக்கின்றானோ அந்த அளவுக்கு அவன் பலசாலியாக வெளிப்படுகின்றான்'' என்பது அவர்களது கருத்து. தப்பி ஓட முயற்சிப்பவன் வாழ்வைச் சிக்கலாக்குகின்றான். பிரச்சினையை நேரடியாகச் சந்தித்து அதன் மையப் பகுதியில் நுழைந்து அதன் தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் போது நமக்குப் பலமும் வந்துவிடும். அதைச் சமாளிக்கும் திறமையும் வந்துவிடும்.

சில சமயம் முழுத்தீர்வு கிடைக்காவிட்டாலும், போதுமான அளவு தீர்வு கிடைத்துவிடும். இதெல்லாம் அனுபவசாலிகள் கூறுவது. அதனால் இனிமேல் பிரச்சினை வந்தால் பயந்து கொண்டு ஓடாமல் அதற்குள்ளேயே சென்று என்னவென்று பார்ப்போம்.

ஒரு அம்மா மனோதத்துவ டாக்டரிடம் வந்தார். "டாக்டர் எங்கள் வீட்டில் ஒரு முக்கியமான பிரச்சினை... அதை எப்படி சரி செய்வது என்று தெரியவில்லை'' என்றார்.

"உங்கள் வீட்டுக்காரரிடம் கலந்து பேசி ஒரு முடிவு எடுக்கவேண்டியது தானே'' என்றார் டாக்டர். "பிரச்சினையே அவர்தான் டாக்டர். அதனால் தான் உங்களிடம வந்து யோசனை கேட்கிறேன்'' என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நூலகம் திறந்து வைப்பு

(மருதங்கேணி)

கிளிநொச்சி இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை நூலகமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், 14இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இப்புதிய நூலகக் கட்டடத்தினை, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. அரியரத்தினம் நாடாவை வெட்டி வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். (தி-35)

# விமல் வீரவன்சவின் கருத்தை சுசில் பிறேமஜயந்த நிராகரிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணாவு உடன்படிக்கை இரத்துச்செய்யப்படமாட்டாது. ஆனால், அவ்வுடன்படிக்கையில் சில மாற்றங்கள் செய்யப் படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தேர்தல் மூலம் மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால், பிரதமருக்கும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிககையை இரத்துச் செய்து புதிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கப்போவதாக சிங்கள வார இதழ் ஒன்றுக்கு பேட்டி வழங்கியிருந்தார்.

இது தொடர்பாக கருத்துக்கேட்டபோதே சுசில் பிறேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், அணமையில் கைச்சாத்திடப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசி,ஜே.வி.பி.உடன்படிக்கையில். இனப் பிரசசினைத் தீர்வுக்கான விடயங்கள் குறித்து மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணி ஒருபோதும் புரிந்துணர்வு உடன்படிக்கையை இரத்துச் செய்ய மாட்டாது. ஆனால், அதிலுள்ள குறைபாடுகள் நீக்கப்படடு சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றார். (தி-61)

# நிரந்தர சமாதானம் ஏற்பட சகல தரப்புடனும் பேசத் தயார்

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

நிரந்தர சமாதானத்திற்கான அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மாத்திரமன்றி அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்குத் தயாராகவுளளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மகரவில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

நாட்டில் உள்ள அனைத்து மக்களும் அச்சமின்றி அமைதியுடனும் சமாதானத்துடனும் நாட்டில் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு இங்கு நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும். அவ்வாறானதோர் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கேற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தும் முன்னெடுபபதற்கு நாடடு மக்களின் ஆணை மிக அவசியம். மக்களின் ஆணையின்றிப் பேச்சுவார்த்தைகளில் எம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடியாது.



இதுவரை காலமும் செயற்பட்டது போன்று இல் லாது நாட்டை ஆட்சி செய்வதற்குத் தேவையான அறிவும் அனுபவமும் கொண்ட மக்கள் நலன் பேணும் சமூகம் ஒன்றை இம்முறை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில், மக்களின் ஆணையைக் கோரி நிற்கின் றேன். இதற்கமைய, தகைமை மற்றும் தராதரம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு சிறந்த தலைமைத்துவத்தைத் தெரிவு செய்வதற்கு மக்கள் சரியான முறையில் செயற்படவேண்டும்.

கடந்த 1978ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் உருவாககப்பட்ட அரசியல் யாப்பில் பல பாரதூரமான அதிகாரஙகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக்கட்சியைத் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் நிலை நிறுத்துவதற்கு இந்த அரசியல் யாப்பு உருவாக்கப்பட்ட போதிலும், கடந்த 1994ஆம் ஆண்டுடன் ஒனறிணைந்த மக்கள் சக்தியின் மூலம் இந் நிலைமைகள் மாற்றப்பட்டன.

தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஊழல்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றது.

இவ அரசாங்கத்தின் ஊழல்களையும் வன்முறைகளையும தடுத்து நிறுத்துவதற்காகவே பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன், எதிர்வரும் ஏப்ரலில் தேர்தல் நடாத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

நீண்ட காலமாகப் பலதரப்பட்டோரின் கருத்துக்களுக்குச் செவி சாய்த்து, பல்வேறுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியதன் பின்னரே ஜனநாயக முறையில் நாட்டில் தேர்தல் ஒன்று நடைபெறவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

எனவே, நாட்டின் தலைமைத்துவத்திற்கு உரிய தகுதிவாய்ந்தவர்களைத் தெரிவு செய்யவேண்டிய முக்கிய பணி நாட்டுமக்களுக்கு உண்டு. அதை உரிய முறையில் மக்கள் அனைவரும் செயற்படுத்த வேண்டும்.

அத்துடன், நாட்டுமக்களின் நலனுக்காகவும் நிம்மதிககாகவும் நிரந்தர சமாதானம் ஒன்றை விரைவில் நாட்டில் ஏற்படுத்துவதற்கு என்னால் இயன்றளவு நடவடிக்கைகளை மேற்கொள்வேன். இதற்காக விடுதலைப்புலிகள் உட்பட சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தத் தயாராகவுள்ளேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (தி-18)

## இராசிபலன்

17. 02. 2004

(மாசி 05, செவ்வாய்க்கிழமை)

| | |
|---|---|
| துவாதசி | முன்னிரவு 8.14 மணிவரை |
| பூராடம் | பிற்பகல் 5.22 மணிவரை |
| இராகுகாலம் | 3.33-5.03 மணிவரை |
| சுபநேரம் | 1.03-12.33 மணிவரை |

**மேடம்**
அதிகாரிகள் உதவி, புதிய திருப்பம், ரோகநிலை, காரிய தாமதம்.

**இடபம்**
நண்பர்கள் விரோதம், ஆரோக்கியகுறைவு, முயற்சி தாமதம், போசன நன்மை.

**மிதுனம**
தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன நன்மை, நண்பர்கள் சந்திப்பு, தொழிலில் ஆர்வம்.

**கடகம்**
சத்துரு ஜெயம், வாக்கு மேன்மை, முயற்சி பலிதம், தனலாபம்.

**சிங்கம**
மனச்சோர்வு, பிறர் உதவி, தொழில் தடங்கல், கௌரவக் குறைவு.

**கன்னி**
புதியவிடயம், கல்வியில் ஆர்வம், மனப் பயம், காரிய தாமதம்.

**துலாம்**
பிரயாண நன்மை, சுவாரஸ்யம், பிறர் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும்.

**விருச்சிகம்**
தனவிரயம், செல்வாக்குக் குறைவு, ரோக பயம், கடுமையான வார்த்தை.

**தனுசு**
நல்ல முயற்சி, போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு, தெய்வசிந்தை.

**மகரம்**
சுரவியாதி, வீண் அலைச்சல், பணவிரயம், தேவையற்ற வார்த்தை.

**கும்பம்**
இஷ்டசித்தி, லட்சுமிகரம், பொருள்சேர்க்கை, உறவினர் வழிநன்மை.

**மீனம்**
நல்லசெய்தி, குடும்ப நலம், தொழில் சிந்தை, இடமாற்றம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# வடமராட்சி கிழக்கு மக்களின் தேவைகள் குறித்து நடவடிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றைப் பூர்த்திசெய்யும் நடவடிக்கைகளில் வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. அநத வகையில், இம்மக்களுக்குச் சிறந்த சேவையினை வழங்கும் முகமாக கடந்த சனிக்கிழமை தொலைத் தொடர்புச் சேவை, நிழற்பிரதி மற்றும் கணனிச் சேவை ஆகியன இந் நிறுவனத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

முன்னர் இச் சேவைகளைப் பெறுவதற்கு பளை, கொடிகாமம், கிளிநொச்சி போன்ற இடத்திற்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருந்த இப் பகுதி மக்களுக்கு இப் புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனததின் சேவைகள் ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-35)

நயனில சொல்லினுஞ் சொல்லுக
சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. -குறள்

# வலம்புரி

## தேர்தலில் மக்களுக்கு அக்கறை உண்டா ?

தேர்தல் அறிவிப்பை அடுத்து அரசியல் கட்சிகள் தத்தம் பணிகளை ஆரம்பித்து விட்டன. சில கட்சிகள் தேர்தலை குறைகூறிவிட்டு ஒய்வெடுத்துள்ளன.

இத்தகைய கட்சிகள் கடந்த தேர்தலில் கட்டுப் பணத்தைக்கூட மீளப்பெறமுடியாதவை. அவ்வகையில் இவற்றின் ஓய்வு தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் வாக்குச் சேகரிப்பில் பெரிதான தாக்கம் எதனையும் ஏற்படுத்திவிடப்போவதில்லை என்பதனால் அதுபற்றி யாருமே அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை.

அதேவேளை, எதிர்வரும் தேர்தலில் இருந்து ஓய்வெடுத்துக் கொண்ட கட்சிகள் தமிழ்க்கட்சிகளாகவும் , அவை வடக்குக்கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டவையாக இருப்பதாலும் அவற்றின் ஓய்வுக்கான முக்கியத்துவம் பெரிதுபடவில்லை.

எனினும், தென்னிலங்கையில் போட்டி போடுகின்ற கட்சிகள் தனித்து நின்று போட்டியிடாமல் ஏதோ ஒரு வகையில் கூட்டுச் சேர்வதை நோக்கமாகக் கொண்டு தங்களின் தேர்தல் வியூகத்தை வகுத்துள்ளன.

அதாவது, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி ஆகிய மூன்று பிரதான கட்சிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்ததனால் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் விரும்பியோ விரும்பாமலோ ஐக்கிய தேசிய முன்னணியுடனோ அல்லது மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியுடனோ இணைந்தே போட்டியிட வேண்டிய தேவைப்பாடு உருவாகிவிட்டது.

இதனால் எதிர்வரும் தேர்தலில் இருபெரும் கூட்டுக் கட்சிகளே தேர்தல் களத்தில் முட்டி மோதவுள்ளன. அதேவேளை முஸ்லிம் கட்சிகள் ஒன்று சேர்ந்து போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கைகள் முஸ்லிம் மக்களிடையே வலுப்பெற்று வருகிறது.

இந்நிலையில் வாக்குகளின் சிதறல்கள் குறைவாகவே இருக்கப் போகின்றது இதன் காரணமாக பாராளுமன்ற ஆட்சி தொங்கு பாலமாக அமையப்போவது தவிர்க்க முடியாதது.

இருப்பினும் தமிழர் பிரதேசமான வடக்குக் கிழக்கில் போட்டியிடவுள்ள தமிழ்க்கட்சிகள் தமக்குள் இன்னமும் முடிபு எதனையும் எடுக்காமல் குழம்பிப் போயுள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் அடங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைகள், தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான ஒரு தெளிந்த முடிபை எடுப்பதற்கு தடையாகவுள்ளது.

அதேவேளை வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் தேர்தல் பற்றி எதுவித அக்கறையும் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். இது தமிழர் தாயகத்தின் எதிர்கால அரசியல் ஸ்திரத் தன்மைக்குப் பேராபத்தாகும்.

தமிழ் மக்கள் தேர்தலில் கொண்டுள்ள அக்கறையீனம், சமகாலத்திற்கு உதவியாக இருப்பினும், அதன் எதிர்கால விளைவுகள் மக்களையும் ஆட்சியையும் அன்னியப்படுத்திவிடும்.

இந்நிலைமை இன-மொழி-தேசப்பற்றற்ற மக்கள் குழுமத்தை உருவாக்கிவிடும். அத்தகையதொரு மக்கள் குழுமம் உருவாகுமேயானால் தேசத்தின் வளர்ச்சி-சாதனை என்பன எவ்வகையிலும் சாத்தியப்படாது போகும் .

எனவே இது விடயத்தில் பொறுப்பானவர்கள் அக்கறை கொண்டு நடந்து கொள்வது மிக அவசியமாகும்.

அதேவேளை, எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் பொறுப்போடு நடந்து கொள்ளாமல் நமக்கென்ன வேலை என்று இருந்து விட்டால் கடந்த காலத் தவறுகள் எதிர்காலத்திலும் நடைபெறுவதற்கு உதவுவதாக இருக்கும்.

பொது மக்கள் தேர்தலில் அக்கறையற்றவர்களாக இருப்பார்களேயானால் அஃது வாக்களிப்பில் முறைகேடுகளை ஏற்படுத்துவதோடு, நடைபெறும் தேர்தல் ஜனநாயக உயிர்ப்புக்குத் தடையாக அமையும் என்பதால், வாக்களிக்கும் உரிமையுடைய ஒவ்வொருவரும் தத்தம் வாக்குகளை தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## முன்னாள் எம்.பிக்கள் தேர்தல் செலவுக்காக கடன்கோரி வங்கியில் விண்ணப்பம்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுள் சுமார் 35 பேர் தேர்தல் செலவுகளுக்காகக் கடன் வசதிகோரி இலங்கை வங்கியில் விண்ணப்பம் செய்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமது நடைமுறைக் கணக்குகளில் மேலதிகக் கொடுப்பனவு வசதிகள் அல்லது, கடன் வசதிகள் செய்து தருமாறு, பாராளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலேயே இவர்கள் விண்ணப்பம் செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களாக இருந்தவர்கள் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரே இவ்வாறு கடன் வசதிகோரி விண்ணப்பம் செய்துள்ளனர்.

இந்த விண்ணப்பங்களூடாக, சுமார் 2 இலட்சம் ரூபா முதல் ஒரு மில்லியன் ரூபா வரை நிதியுதவி கோரப்பட்டிருப்பதாகவும், இவ்வாறு விண்ணப்பித்தவர்களுள் பெரும்பாலானவர்கள் கிராமப் புறங்களைச்சேந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4 வருடங்களுக்குள் 3 தடவைகள் பாராளுமன்றத்தில் தேர்தல் நடாத்தப்பட்டதால், தேர்தலுக்காகச் செலவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடுகள் இல்லாத நிலையிலேயே இவர்கள் இவ்வாறு வங்கிக் கடன் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தி-18)

## வடமேல் மாகாண சபைத் தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் ஆரம்பம்

(கொழும்பு)

வடமேல் மாகாண சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான நியமனப் பத்திரங்கள் இம் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸ நாயக்க அறிவித்துள்ளார்.

இந் நியமனப் பத்திரங்கள் யாவும் குருநாகல், புத்தளம் ஆகிய இரு மாவட்டச் செயலகங்களிலும் ஏற்றுக்கொள்ளப் படவுள்ளன.

இம் மாகாண சபைத் தேர்தல் மூலம் குருநாகல் மாவட்டத்திலிருந்து 34 உறுப்பினர்களும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 19 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கிடையில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் இறுதி நாளான மார்ச் மாதம் 5 ஆம் திகதி வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும்.(தி-61)

# தேர்தல்களம்

## கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட புளொட் விருப்பம்

(கொழும்பு)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்குத் தாம் தயாராகவிருப்பதாகப் புளொட் அமைப்பின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளைக் கூட்டமைப்பினர் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டிருக்கிறார்.

இதேவேளை, பொதுத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது குறித்த சித்தார்த்தனின் கோரிக்கைக்கு கூட்டமைப்பின் தரப்பிலிருந்து இதுவரை பதில் எதுவும் அனுப்பப்படவில்லை.

மேலும், 2001 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவதற்குச் சித்தார்த்தன் விருப்பம் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

### ௐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவனாகின்றானோ அந்த அளவுக்குத் தக்கபடி அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாகவேண்டும்.

கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிடமுடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.

சுவாமி சிவானந்தர்

## மட்டக்களப்பில் 315 வாக்குச் சாவடி

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்காக 315 வாக்குச் சாவடிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளதாக மாவட்டத் தெரிவு அத்தாட்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க ஆய்வினைத் தொடர்ந்தே இவ் விடயம் பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 இலட்சத்து 30 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. (தி-60,10)

## மாவட்டச் செயலகங்களில் இன்று முதல் வேட்பு மனுத் தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று செவ்வாய் கிழமை முதல் எதிர்வரும் 24ஆம் திகதி நண்பகல் வரை நாட்டில் உள்ள அனைத்து மாவட்டச் செயலகங்களிலும் தாக்கல் செய்யப்படவுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் போட்டியிடவுள்ள சுயேட்சைக் குழுக்கள் தங்களது கட்டுப் பணத்தையும் வேட்பு மனுக்களையும் வவுனியா மாவட்டசெயலகத்தில் தாக்கல் செய்யலாம். இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் தினங்களில் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டச் செயலகங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

இத் தேர்தலில் 51 அரசியல் கட்சிகள் போட்டியிடத் தகுதிபெற்றுள்ளன. கடந்த 2002 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பிற்கு அமைய ஒரு கோடியே 29 இலட்சம் வாக்காளர்கள் இப் பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள முப்படையினர், அரசதிணைக்களங்கள், பொலிஸ் மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றில் கடமையாற்றும் ஊழியர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டும்.

இதேவேளை, பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேட்சைக் குழுக்களும் நாளை முதல் தமது கட்டுப் பணங்களை அந்த மாவட்டச் செயலகங்களில் செலுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-61)

## அம்பாறை உள்ளூராட்சித் தேர்தல் இடைநிறுத்தம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசங்களுக்கான உளளூராட்சி மன்றத் தேர்தலை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தி வைக்குமாறு அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல ஆணையாளருக்கு தேர்தல் ஆணையாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இம் மாவட்டத்துக்கான உள் ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தத்திட்டமிடப்பட்டது. தேர்தல் ஆணையாளரின் இவ் அறிவித்தலை அடுத்து, தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இம் மாவட்டத்துககான உளளூராட்சி மன்றத் தேர்தலை நிறுத்தக்கோரி அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.கே. சமீர் மன்றம் வாக்காளர்கள் நால்வர் கொழும்பு உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (தி-61)

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் மார்ச்மாத இறுதியில் வருகின்றனர்

### உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நடவடிக்கைகளைக கண்காணிக்கும் பொருட்டு சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக உதவித் தேர்தல் ஆணையாளர் ஜி.சேனநாயக்க தெரிவித்தார்.

ஆஸியத் தேர்தல் அதிகார சபை, ஐரோப்பிய ஒன்றியம், பொது நலவாய நாடுகள் ஆகிய சர்வதேச அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். இவற்றைவிட வங்காளதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலும் பொதுத்தேர்தல் நடைபெறவிருப்பதனால் அங்கிருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைக்கும் நோக்கம் இல்லையென்றும், சர்வதேச நாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்கள் மார்ச் மாதம் பிற்பகுதியில் இலங்கைக்கு வருவார்கள் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். இலங்கை வரும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் அனுப்பிவைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.(ச)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

# கல்விப்பணிப்பாளர்களுடன் நேற்று யாழ். தளபதி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் மற்றும் யாழ். மாவட்டத்தின் ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பு யாழ். கல்வி வலய மாகாணக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது மாணவர்களின் கல்வியில் எற்படும் பாதிப்புக்களை இனங்கண்டு தீர்வு காணும்படியும் கல்வி அபிவிருத்திக்கு தான் உதவுவதாகவும் இராணுவத்தளபதி தெரிவித்தார். இவருடன் பிரதிக் கட்டளைத் தளபதியும் கலந்துகொண்டார்.

இதேவேளை இச் சந்திப்பின் போது உயர் பாதுகாப்பு வலயங்களினுள் இருக்கும் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் நிலைமை குறித்து ஆராயப்பட வில்லையென தெரிவிக்கப்படுகிறது. (ச-3)

## ஜே.108ல் வசிக்கும் தரம் 6 மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்திபெற்ற ஜே.108 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மாணவர்கள் தமது பெயர் விபரங்களைப் பதிவு செய்யுமாறு நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச சங்கத் தலைவர் அ.சீவாமிர்தம் கேட்டுள்ளார்.

இப்பதிவுகள் நாளை காலை 9.00 மணிதொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை நல்லூர் முருகன் சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## கல்விக் கருத்தரங்கு

(கந்தர்மடம்)

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த (சா\த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கொன்று இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் க.பொ.த (சா\த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மத்திய கல்லூரியின் அதிபர் கேட்டுள்ளார். (தி-96)

## நீதிமன்றத்...

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ள தடை உத்தரவை ரத்துச் செய்வதுடன், மேல்நீதி மன்றமனுவின் தீர்ப்புவரும்வரை மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவை இடை நிறுத்துமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம)

## இலங்கைக்கு..

தூதுவர் யசூசி ஆகாஷி, நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் இணைத் தலைமைத்துவம் வகித்து வந்த நாடுகளின விசேட பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக அமெரிக்காவுக்கான இலங்கைத தூதுவர் டேவிந்த சுபசிங்க தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இன்று வாஷிங்டனில் நடைபெறவுள்ள கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளமாட்டார்கள் என பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். (தி-61.10)

## கண்காணிப்பு...

மீதான படையினரின் நெருக்குவாரங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இதனால் கடற் தொழிலாளர்கள் சுதந்திரமாக தமது தொழிலை மேற் கொள்ள முடியாதுள்ளது.

யாழ்.குடாநாட்டில் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நெருக்கடி நிலை உள்ளது. அத்துடன் குடாநாட்டில் சட்டம் ஒழுங்கு உரியமுறையில் பேணப்படுவதில்லை. இங்கு சட்டம் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளில் தளர்வுற்ற நிலையே காணப்படுகிறது.

இது விடயம் குறித்து பொலிஸாரிடம் முறையிட்டாலும் அது தொடர்பாக பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய அக்கறை எடுக்கப்படவில்லை.

இவ்வாறான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய வழிவகைகளூடாக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் யாழ்.மாவட்ட ஊடகத்துறைப் பொறுப்பாளர் இமயவன் ஆகியோரும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அரசியல் ஆலோசகர் டெனி அனான், கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகப் பொறுப்பாளர் றொபேட் ஹரிஷன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ந-19,43)

## ஊடகத்துறை...

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நேற்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையில், ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமரையும், ஊடக அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜாவையும் எதிர்வரும் முதலாம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த)

## ஜனாதிபதி ஆட்சி....

கரமான ஆட்சியை நடத்த முடியாது.

எனவே நாட்டை சமாதான வழிமுறையில் இட்டுச் செல்வதற்கு என்னிடம் அரைவாசி அதிகாரத்தையும் , இன்னொருவரிடம் அரைவாசி அதிகார்த்தையும் வழங்க வேண்டாம்.

அனைத்து அதிகாரங்களையும் அவர்களிடம் கொடுங்கள் அல்லாவிடில் உங்கள் ஆணையை எனக்கு தாருங்கள் என வேண்டுகோள் விடுத்த ஜனாதிபதி,

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கவும் , தற்போதைய அரசாங்கத்தின் ஊழல்களையும், வன்முறைகளையும் தடுத்து நிறுத்துவதற்காகவுமே பிரதமர் உடனான நீண்டகாலப் பேச்சு வார்த்தையின் பின்னர் ஜனநாயக முறையில் தேர்தலை நடத்தப் பாராளுமன்றத்தைக் கலைத்தேன் என்றும் தெரிவித்தார். (ம)

## அமைச்சர்...

ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை உள்விவகார அமைச்சராக இருந்த ஜோன் அமரதுங்கவின் அமைச்சு கடந்த நவம்பர் மாதம் 4ம் திகதி ஜனாதிபதியால் பறிக்கப்பட்டிருந்தது. தற்போது கிறிஸ்தவ விவகார அமைச்சர் பதவியில் இருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார். (த)

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆங்கில மூலம் இலக்கணம். மேற்படிப்பு மாணவர்களுக்கு தமிழ் மூலம் சுலபமாக கதைக்கப் பயிற்சி அடிப்படை மாணவர்களுக்கு ஆசிரியர்:
விக்னேஸ்வரன் ஆச்சாரி
426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.
(8260)

## ஜனாதிபதி எழுதிய...

பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் கடும் முயற்சிகள் பெருந்தொகைப் பணச் செலவு முதலியவற்றை மேற்கொண்டே பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்தலின் போது அரச அமைப்புக்கள் பல நெருக்கடிகளை, தேர்தலை நடத்துவதற்கு பல கோடிக் கணக்கான ரூபாய்களை செலவு செய்ய வேண்டிய நிலைமைகளை எதிர் நோக்குகின்றன. இப் பாரிய செலவீனத்தை நாடு தாங்கும் நிலையில் இல்லை.

● இது தவிர அரசுடனும் வர்த்தக நிறுவனங்களுடனும் தொடர்புடைய வர்த்தக அமைப்புகள் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலியவர்களுக்கு சங்கடமான நிலைமையத் தோற்றுவிக்கும்.

● பொலிஸ் ஆணைக்குழுவும் தேர்தல் ஆணைக்குழுவும் பொதுத் தேர்தலின் முன் அமைக்கப்பட வேண்டும். இந்த ஆணைக்குழுக்கள் இயங்க ஆரம்பிக்க கணிசமான கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும்.

● பலதரப்பட்ட இன, பலத்ரப்பட்ட சமய நாட்டிலேயே நாம் வசிக்கிறோம். இனப்பிரச்சினைக்கு நியாயமான நிலையான தீர்வு காணப்பட வேண்டியது மிகமிக முக்கியமானது. ஒவ்வொரு அரசியற் கட்சிக்கும் இது ஒரு முக்கிய சந்தர்ப்பமாகும். இந் நிலையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதானது சமாதான நடவடிக்கைகளுக்கும் அதன் மூலம் கிடைக்கவிருக்கும் பெறுமதி வாய்ந்த முடிவுகளுக்கும் இடையூறு விளைவிப்பதாகவே அமையும்.

● மூன்று வருட காலத்திற்கிடையில் பொது மக்கள் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றையும் பொதுத் தேர்தல்கள் இரண்டையும் கண்டிருக்கிறார்கள். தேர்தல் யுகத்திலிருந்து அவர்களுக்கு விடுதலை அளிப்பது முக்கியமானது.

● 12வது பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களூடாக, இலங்கை வாழ் மக்களுக்கும் கூறவிரும்புவது இது தான்.

தற்போது அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கும் வெற்றி பெற்ற கட்சி அதன் பெரும்பான்மைப் பலத்தைப் இழந்தால் அல்லது தற்போது உள்ள பாராளுமன்றத்தில் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்க கூடிய நிலைமை ஏற்படாமல் இருந்தால்;

அன்றி வேறு எக்காரணம் கொண்டும் நான் பாராளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன். இவ்வாறு ஜனாதிபதி எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கலைத்ததன் மூலம் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கும் நாட்டிற்கும் அளித்த வாக்குறுதியை மீறிவிட்டார். காற்றில் பறக்க விட்டுவிட்டார்.

ஒரு பாராளுமன்றத்தை பொது மக்கள் தங்களது மன விருப்புக்கமைய, அரசியல் அமைப்பு ரீதியாக தேர்ந்தெடுத்த மக்கள் ஜனாதிபதியால் நல்வழியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பாராளுமன்றத்தையும், மக்களையும் நேரிய வழியில் செல்லவிடாமல் தடுக்கும் அரசின் தலைமைகள் யாராக இருந்தாலும் அரசியல் அமைப்பின் பிரகாரம் தகுந்த தண்டனை கிடைத்தே தீரும். ஆனால் ஜனாதிபதி தனது குறித்த காலம் முடிவடைவதற்கு முன் பாராளுமன்றத்தைக் கலைத்த செயலுக்கு நியாயம் கற்பித்துக் கொண்டிருக்கிறார் என்று ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார். (த)

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P: 0602212472

## தேர்தல்...

வேட்பாளர்களின் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஆவணங்கள் தமது பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கூட்டணி செயலாளர் இரா.சம்பந்தனை சங்கரி கேட்டிருக்கிறார்.

இது விடயம் குறித்து ஆனந்த சங்கரி நேற்று சம்பந்தனுக்கு கடிதம எழுதியுள்ளார்.

மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் கூட்டணி வேட்பாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். மேற்படி வேட்பாளர்களின் நியமனம் குறித்து நான் இறுதி முடிவு எடுக்கவில்லை. வேட்பாளர் நியமனம் குறித்து என்னிடம் முதலில் கலந்தாலோசிக்காதபடியால் வேட்பாளர் நியமனம் குறித்து பரிசீலிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு ஆனந்தசங்கரி, சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். (த)

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி
தோற்றம்: 22 - 07 - 1923

மறைவு: 28 - 02 - 2003
திருமதி தங்கம்மா ஆறுமுகம்
(கந்தரோடை)
பாசமும் நேசமும் காட்டி
பாரினிலே பண்புடன் வளர்த்த
அன்னையே - உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை நாடுகின்றோம்.
ஆ.வரதராஜன்
கணக்குப் பகுதி,
தபால் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
-பிள்ளைகள்
(8245)

31ம் நாள் நினைவஞ்சலி
தோற்றம் 10.09.1913

மறைவு 18.01.2004
18.01.2004 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்
அமரர் திருமதி கணபதி கண்மணி
அவர்களின்
வீட்டுக்கிருத்திய கிரியைகள் 16.02.2004 திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நேற்று நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 17.02.2004 செவ்வாய்க்கிழமை இன்று முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்திற்கு வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.
தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு.
இங்ஙனம்,
க.கிருபாகரன் (பேரன்)
(C/7274)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.